# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. III Issue 6 September 2013

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 2 |
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 3 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 21 |
| யோக வாழ்க்கை விளக்கம் . . . . . | 23 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 25 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் . . . | 29 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டுவரும் இரகசியங்கள். . | 37 |
| அன்பர் கடிதம். . . . . . . . . . . . . . | 43 |
| உண்மையின் பல்வேறு பரிமாணங்கள் . . . . . . . . . . . . | 47 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 50 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 52 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . . | 54 |


**ஜீவியத்தின் ஓசை**

**பிரம்மம் அது தேடும்**

**ஆனந்தத்தை நம்**

**வாழ்வில் நாம் காண்பது**

**நம் யோக வாழ்வாகும்.**

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## இம்மாதச் செய்தி

# பயம்
# உள்ளவரை
# பக்தியில்லை



## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

கர்மயோகி

### 25. ஜடத்தின் முடிச்சு

நூலுக்கு அடிப்படையாக சில கருத்துகளை நாம் எடுத்துக் கொண்டோம். அவை நமக்கு ஒரு முடிவைத் தருகின்றன. நாம் ஏற்றுக்கொண்ட அடிப்படையினின்று வேறு எந்த முடிவுக்கும் வர முடியாது. மனித வாழ்வின் அனுபவம் ஜடத்தையும், ஆன்மாவையும் தீவிரமாகப் பிரிக்கின்றது. அது மனம் பெற்ற நெடுநாள் பழக்கம். நாம் வந்த முடிவுகள் அப்பிரிவினையை ஏற்க மறுக்கின்றன. நம் முடிவுகளின்படி அப்பிரிவினைக்கு அடிப்படையோ, அதற்குரிய சத்தியமோ இல்லை. உலகம் பலதரப்பட்ட ஒருமையால் நிறைந்தது. தோற்றம் பிரித்துக்காட்டினாலும், பின்னணியில் அடிப்படை இணைந்து ஒற்றுமையை நிலைபெறச் செய்கிறது. சாஸ்வத-மான பிரிவினை உணர்வுகள் எங்குமில்லை. பிரிவினையில்லை என்பது மட்டுமல்ல, பிரிந்தவற்றை இணைக்கும் முயற்சியும் தெரியவில்லை. நிரந்தரமாகப் பிரிந்தவை முயன்று ஒன்று சேர முயலும் போக்கையும் காணோம். இணைய முடியாத எதிர்ப்புகள் எங்குமில்லை. மாறாக நீக்க முடியாத ஒருமை எங்குமுள்ளது. அது அனந்தமான ரகங்களை ஏற்படுத்துகிறது. அதுவே அடிப்படையில் ஆரம்பம். பிரிவினை தோற்றமாக உள்ளது. போராட்டம் நம் கண்ணில்படுகிறது. போராட்டத்தை ஒன்றோடு ஒன்று இணைக்கும் முயற்சி பிரிவினையைப் போக்கும் முயற்சி. இவை இரகசியமான ஜீவியத்தின் நீண்ட நாள் குறிக்கோளாகும். அதுவே இலட்சியம். அங்கு உறுதியும் காணப்படுகிறது. உறுதி உறுதியான செயல், சிக்கலைச் சிறப்பாக வெளிப்படுத்தும் நிலையான உறுதியான செயல். இதுவே உண்மையின் உள்ளர்த்தமாகிறது. நாம் ஒரு முடிவான

பூர்த்தியை எதிர்பார்க்கிறோம். அது ஜீவியம் உறுதியாக மறைவினின்று எழுவது. அற்புதமான வெற்றியை அறிவிப்பதே முடிவு. பொருள் என்பது ஒருவகையான ரூபம். அது தன்னைத்தானே செயல்படச் செய்யும். அப்பொருளின் ஓர் எல்லை ஜடம். ஆன்மா அடுத்த எல்லை. நாம் ஜடம் எனக் காண்பதின் ஆத்மாவும், சத்தியமும் ஆன்மாவாகும். ஜடம் ஆன்மாவின் உடலும் உடையுமாகும்.

உண்மையில் பெரிய நடைமுறை வித்தியாசம் உண்டு. படிப்படியாக உயரும் வாழ்வு நிலைகள் உண்டு. அது ஒரு தொடர். பகுக்க முடியாத பொருளாலானது. அது உலக வாழ்வு. அவ்வாழ்வு இத்தொடரின் அடிப்படையில் ஏற்பட்டது. பொருள் ஜீவனுள்ள வாழ்வு. பொருள் புலனுக்குரிய புற நிகழ்ச்சியான பொருள். புலன் தொடர்பு அப்படி ஏற்படுகிறது. அதுவே உலகம் உருவாகும் வேலை. அது பிரபஞ்சம் முன்னேறும் வழி. அது இவ்வகையாகச் செயல்படுகிறது. ஒரு அடிப்படை மட்டுமிருக்க வேண்டும் என்பதில்லை. அது அடிப்படையான உறவு. அது உறவின் சட்டம். பொருளுக்கும், புலனுக்கும் இடையே மாற்றமறியாத உறவாக அது எழுகிறது. மாறாக அது ஒரு தொடர். அது படிப்படியாக உயரும் தொடர். அது வளரும் தொடர். வேறொரு பொருள் தென்படுகிறது. தூய்மையான மனம் அதில் செயல்படுகிறது. அது இயல்பான சூட்சுமமான இடைவெளி. அது மென்மையாக மாறும் தன்மையை மிருதுவாகப் பெற்றது. நம் ஜட உணர்வு அதைவிட சூட்சுமமானதைக் கற்பனை செய்ய முடியாது. மனத்தின் பொருள் என நாம் அதைக் கூறலாம். அங்கு அதிக சூட்சுமமான பாதையைக் காணலாம். அப்பாதையில் ரூபங்கள் எழும். அங்கு செயலுண்டு. வேறு ஒரு பொருளையும் கருதலாம். அது தூய்மையான தீவிரமான வாழ்வின் சக்தி. ஜடப்பொருளின் சூட்சும ருபங்களினின்று மாறுபட்டது அது. உடலால் உணர முடியும் சக்தி ஓட்டங்கள் அவை. ஆன்மாவே ஜீவனுடைய பொருள். ஆன்மா புறப்பொருளாக நிற்கிறது. அது ஜட வாழ்வு. மனத்தின் புலன்கட்குரியதல்ல. தூய்மையான ஆன்மீகப்



பரிச்சயத்திற்குமுன் அது தன்னை நிறுத்துகிறது. அங்கு அகமே புறம். காலத்தைக் கடந்ததும், இடத்தைக் கடந்ததும் அங்கு தன்னை அறியும். அது தூய்மையான ஆன்மீகச் சிந்தனைக்குரிய சுய நீட்சி. அது அடிப்படையான பொருளின் அஸ்திவாரம். அடிப்படையைக் கடந்ததுண்டு. தன்னையறியும் பிரியாமற்பிரிபவை அனைத்தும் அங்கு மறைகின்றன. அது அகம் புறத்தின் இடைப்பட்டது. ஐக்கியத்தின் ஒற்றுமை முழுமை பெற்ற இடம் உண்டு. அங்கு பொருள் என்பது பொருளை இழக்கும்.

இது முழுவதிலும் சிந்தனைக்குரிய வித்தியாசம். இது மனத்தின் சிந்தனையல்ல. ஆத்ம சிந்தனை. இம்மாறுதல் நடைமுறை வித்தியாசத்தில் முடியும். இதுவே அடுக்குத் தொடரை சிருஷ்டிப்பது. இது ஆன்மாவிலிருந்து ஜடத்திற்குப் படிப்படியாக இறங்கி வருகிறது. இது மனத்தின் வழி நடக்கிறது. மறுபடியும் அது உயர்ந்து ஆன்மாவை அடைகிறது. மீண்டும் அது மனம் வழிச் செல்கிறது. அடிப்படை- யான ஒருமை எப்பொழுதும் அழிவதில்லை. நாம் ஆரம்பக் கருத்தைக் கருதுவோம். அது ஒருங்கிணைந்த முழுமையான கண்ணோட்டம். அது எப்பொழுதும் எந்த சிறு அளவிலும் குறையவில்லை. அது சிதைக்கப்படவில்லை. ஜடத்தின் கனத்த இருளிலும் அது பாதிக்கப்படவில்லை. பிரபஞ்சத்தின் மூலமும், ஆதரவும் பிரம்மமாகும். அது பிரபஞ்சத்துள் உறையும் தத்துவமுமாகும். மேலும் பிரம்மமே பொருள். அது மட்டுமே பொருளாகிறது. ஜடமும் பிரம்மம். அது பிரம்மம் தவிர வேறெதுவுமில்லை. அது பிரம்மத்திலிருந்து வேறுபட்ட- தில்லை. ஜடத்தைப் பிரம்மத்திலிருந்து வெட்டிப் பிரித்ததாகக் கொள்வோம். அப்பொழுது அது உண்மையில்லை. ஜடம் தெய்வீக வாழ்வின் முடிவான ரூபம் எனக் கண்டோம். அது புற அம்சம். கடவுளின் எல்லா அம்சமும் அதனுள் உறைகிறது. கடவுள் ஜடத்தின் பின்னணியில் உள்ளார். பார்வைக்கு ஜடம் ஜீவனற்ற முரட்டுத்தனமானது. அது எங்கும் உள்ளது. ஜடத்திற்கு வாழ்வின் சக்தி ஜீவனோடுள்ளது. ஜடம் பலமான,

தீவிரமான சக்தி. ஜடம் தீவிரமானது. ஜீவனற்ற வாழ்வுடையதாகக் காணப்படுகிறது. தன்னுள் மனத்தை இது ஊற்றாக உற்பத்தி செய்கிறது. மனம் எங்கும் உள்ளது. அது பார்வையில் படாமல் எங்கும் வேலை செய்தபடி உள்ளது. அதன் இரகசியங்கள் சக்தியுள் உள்ளன. அஞ்ஞானமான மனம் இருளடைந்து தடுமாறும். அது உயிருள்ள உடலில் உள்ளது. அதற்கு ஆதரவுண்டு. சுதந்திரமாக வழிகாட்டியும் உண்டு. அதன் சொந்த ஆத்மா அதைச் செய்கிறது. அது சத்திய ஜீவியம். மனம் ஊடுருவாத ஜடத்துள் அது உள்ளது. எனவே எல்லா மனம், வாழ்வு, உடல், சத்திய ஜீவியமும் பிரம்மமே, பிரம்மத்தின் அம்சங்களே. பிரம்மம் சாஸ்வதமானது. அது ஆத்மா, சச்சிதானந்தம். அனைத்துள்ளும் அது உண்டு. அனைத்தும் பிரம்மமே. எந்த ஒன்றும் தனியாக பிரம்ம ஜீவனாகாது.

இருந்தாலும் சிந்திக்கும் வித்தியாசம் உண்டு. நடைமுறையில் அவை வேறு. ஜடம் ஆன்மாவினின்று வெட்டி விலக்கப்படவில்லை எனக் கொள்வோம். இருந்தாலும் இந்த நடைமுறை மாறுதல்களால், அவை விலக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவை வேறுபட்டவை. இது சட்டத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம். ஜட வாழ்வு மறுப்பாகத் தெரிகிறது. எல்லா ஆன்மீக வாழ்வையும் அது மறுப்பதாகத் தோன்றுகிறது. அப்படி மறுப்பது குறுக்கு வழியாகும். சிரமத்தை விலக்கும் குறுக்கு வழியது. அது நிச்சயம். அது குறுக்கு வழியாகவோ, எந்த வழியாகவோ இருக்கலாம். ஆனால் அது தீர்வாகாது. எப்படியானாலும் சிக்கலின் சிகரம் ஜடம். அதில் ஐயமில்லை. அது தடையை எழுப்பும். ஜடத்தால் வாழ்வு அளவுள்ளதாகவும், மட்டமானதாகவுமாகிறது. மரணமும், வலியும் அதை வதைக்கின்றன. ஜடத்தால் மனம் ஒரு கண்ணை இழக்கிறது. அதன் சிறகு ஒடிகிறது. அதன் கால்கள் குறுகிய பீடத்தில் கட்டுண்டன. மேலேயுள்ள பரந்த சுதந்திரத்தை அவை இழக்கின்றன. அதை ஜடம் அறியும். ஆன்மாவை மட்டும் நாடும் சன்னியாசியைக் கருதுவோம். அவரது



கொள்கை சரி. ஜடத்தின் சக்தி அவருக்கு வெறுப்புத் தருகிறது. வாழ்வு மிருகத்தனமாக இருப்பது சன்னியாசிக்கு வெறுப்பை உண்டாக்குகிறது. அதன் குறுகிய நோக்கம் சன்னியாசியின் பொறுமையைச் சோதிக்கிறது. அவர் மனப்போக்கு கீழ் நோக்கியது. அதனின்று விலக அவர் முடிவு செய்கிறார். செயலற்ற மௌனம் அவரை ஈர்க்கிறது. அது ஆன்மாவின் அசைவை இழந்த சுதந்திரம். அது மட்டுமே கொள்கையாகாது. அது உயர்ந்தது, உன்னதமானது, தங்கமான உதாரணங்கள் பல உள. அதன் முடிவான இணைந்துள்ள ஞானத்தை நாம் கருத வேண்டாம். தீவிரமான ஆசையினின்றும், மறுக்கும் புரட்சி மனப்பான்மையினின்றும் நாம் விலக வேண்டும். உலகிலும், பிரபஞ்சத்திலும் தெய்வீக வாழ்வு என்ன என்பதைக் கருதுவோம். இது ஜடத்தின் பெரிய சிக்கலான முடிச்சு. அது ஆன்மாவை மறுக்கிறது. அதன் பிரிந்து விலகும் இழைகளைக் காண்போம். அது பிரிப்பது சரி. ஒரு தீர்வால் அம்முடிச்சை அவிழ்ப்போம். வன்முறையால் வெட்டி அகற்ற முயல வேண்டாம். சிரமத்தை எடுத்துக் கூறுவோம். சிரமம் எதிர்ப்பு. முழுமையாக, தீவிரமாக, பெரிதுபடுத்தி அதை முதலில் கூறுவோம். அவசியமானால் சுருக்கியும் கூறலாம். அதன் விளைவைக் கருதுவோம்.

இது ஜடத்தின் முதல் எதிர்ப்பு. ஆன்மாவுக்கு எதிர்ப்பு. இது அஞ்ஞானம். இதை அஞ்ஞானத்தின் முடிவு எனலாம். ஜீவியம் வேலையில் தன்னை இழப்பது அஞ்ஞானம். வேலையின் ரூபத்தில் ஜீவியம் தன்னை மறக்கிறது. ஒருவர் வேலையில் தன்னை மறக்கிறார். தான் உயிருடனிருப்பதையே அவர் மறக்கிறார். அந்த க்ஷணம் அவர் வேலையாகவே மாறுகிறார். அந்த வேலையைச் செய்யும் சக்தியாகவே மாறுகிறார். ஆன்மா சுயம்பிரகாசமானது. அது தன்னை அனந்தமாக அறியும். எல்லா சக்தியின் செயலுக்கும் பின்னால் ஆன்மா உள்ளது. அதுவே அதன் தலைவன். அது மறைந்ததாகத் தோன்றுகிறது. அது இருப்பதாகவேயில்லை. எங்கோ அவனிருக்கலாம். இங்கு அவன் விலங்கான ஜட இருளாக, அதன் சக்தியாக இருக்கிறான்.

அது சாஸ்வதமாக சிருஷ்டித்து அழிக்கிறது. அது தன்னை அறியாது, எதை சிருஷ்டித்தோம், ஏன் சிருஷ்டித்தோம், என அறியாது. அல்லது சிருஷ்டித்ததை ஏன் அழித்தோம் என்றும் அறியாது. மனம் இல்லாததால் அது தன்னையறியாது. அதற்கு நெஞ்சமில்லாததால் பொருட்படுத்தாது. ஜட லோகத்திற்கு உண்மையுண்டு. இது அந்த உண்மையாக இல்லாமலிருக்கலாம். இந்த எல்லா தோற்றத்தின்பின் மனம் என ஒன்றுண்டு. உறுதியுண்டு. மனத்திற்கும், உறுதிக்கும் பெரியதும் ஒன்றுண்டு. இருந்தாலும் அது கரியது. அவையாகத் தோன்றுபவை. ஜடலோகம் தன் ஜீவியத்திற்கு சத்தியமாகத் தோன்றுகிறது. இருளிலிருந்து ஜீவியம் எழுகிறது. ஆனால் அது உண்மையில்லை. அது பொய். அது பெரிய பொய். ஏனெனில் அது நம் தோற்றமான வாழ்வை நிர்ணயிக்கும். நம் முயற்சி, ஆர்வத்தை எல்லாம் அது ஆக்ரமித்துக் கொள்கிறது.

ஜடம் பயங்கரமானது, பச்சாதாபமற்ற, கடுமையான ஆச்சரியகரமான ஜடலோகம் அது. மனமற்ற இதனின்று ஒரு மனம் அல்லது பல மனங்கள் எழுகின்றன. அவை ஜோதியைப் பெறப் போராடுகின்றன. தனிப்பட்ட முறையில் அதற்கு எதுவும் செய்வதற்கில்லை. தன்னைப் பாதுகாக்க அதுவும் முடியாத நிலை. அவை ஒரு ராட்சத அஞ்ஞானத்துள் உறைகின்றன. தனிப்பட்ட முறையில் அவை பலஹீனமானவை. அஞ்ஞானம் பிரபஞ்ச சட்டம். இதயமற்ற ஜட இருள் இது. அதன் எல்லை கடுமையானது. அதிலிருந்து இதயங்கள் எழுகின்றன. அவை ஆர்வத்தால் எழுந்தாலும் கொடுமைப்படுத்தப்படுகின்றன. கொடுமையால் இரத்தம் சிந்துகின்றன. கொடுமை குருடாக, சொரணையற்றதாக இருக்கிறது. இது இரும்பாலான வாழ்வாகக் காணப்படுகிறது. கொடுமை அதன் சட்டத்தை அமுலாக்குகிறது. அதற்குச் சொரணை உரைக்கிறது. அது ஆபத்தானது, பயங்கரமானது, மிருகம் போன்றது. புதிராகத் தோன்றும் இது என்ன? இதன் தோற்றத்தின்பின் என்ன இருக்கிறது? அது ஜீவியம். அது மீண்டும் தன்னை வந்தடைகிறது. அது அதனுள் தன்னை



இழக்கிறது. பயங்கர மறதியினின்று அது எழுகிறது. மெதுவாக வலிபட்டு எழுகிறது. சொரணையுள்ள வாழ்வுக்கு அது மீண்டும் வருகிறது. அரைகுறையான சொரணையுடையது அது. லேசான சொரணையுடையது. முழுச் சொரணை உடையது. முடிவாக சொரணையைக் கடந்த நிலையையடைய அது போராடுகிறது. சுதந்திரமான, அனந்தமான, அழியாத, தெய்வீக சொரணையை அடைய முயல்கிறது. இதை நோக்கி ஒரு சட்டப்படி அது செல்கிறது. அந்தச் சட்டம் இவை அனைத்திற்கும் எதிரானது. இது ஜட நிபந்தனையின் பேரில் வேலை செய்கிறது. அதாவது அஞ்ஞானப்பிடிப்பிற்கு எதிராகச் செயல்படுகிறது. அதன் பாதை முன்கூட்டி வகுக்கப்பட்டது. அது அளவையும், அஞ்ஞானத்தையும் வலியுறுத்துகிறது. அது துண்டாடப்பட்ட ஜடம். ஒவ்வொரு கட்டத்திலும் அது அளவையும், அஞ்ஞானத்தையும் வலியுறுத்தும்.

இது ஜடத்தின் இரண்டாம் அடிப்படையான எதிர்ப்பு. ஜடம் ஆத்மாவை அதன் மூலம் எதிர்க்கிறது. இயந்திரச் சட்டம் கட்டுப்படுத்துவதன் முடிவு இது. அது ஒரு பிரம்மாண்டமான தமஸ். விடுதலையை நாடும் எதையும் எதிர்க்கும் பாங்குடையது தமஸ். ஜடமே தமஸானதல்ல. அது அனந்தமான சலனம் உடையது. ஜடம் கற்பனைக்கெட்டாத சக்தி. அதன் செயல் அளவிறந்தது. அதனலைகள் பெருமையுடைய பேரளவுடையவை. நாம் அதை இடையறாது பாராட்டலாம். ஆன்மா சுதந்திரமானது. ஆன்மா தன் செயல்களுக்கும், தனக்கும் தலைவன். ஆன்மா அதன் செயல்களால் கட்டுண்டதில்லை. ஆன்மா சட்டத்தை இயற்றும். ஆனால் தன்னை அச்சட்டத்திற்கு உட்படுத்தாது. ஜடம் ராட்சதனைப் போன்ற பிரம்மாண்டமான உருவம் கொண்டது. விலங்குகளால் அசைய முடியாதபடி அது சிறைப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டங்கள் நிலையானவை, இயந்திரம் போன்றவை. இவை தம்மை மற்றவற்றின்மீது திணிக்கும் திறனுடையவை. ஜடத்திற்கு இந்தச் சட்டங்கள் புரியாது. ஜடம் இவற்றைத் தன் சிந்தனையில் உருவாக்கவில்லை. அவை ஜீவனின்றி செயல்படுகின்றன. ஒரு மெஷின்

போல வேலை செய்கிறது. யார் இவற்றை சிருஷ்டித்தார் என அது அறியாது. அதன் முடிவோ, முறையோ ஜடத்திற்குத் தெரியாது. வாழ்வு விழித்தெழுகிறது. வாழ்வு ஜடரூபத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முயல்கிறது. அதையே ஜடசக்தியின் மீதும் செலுத்த முயல்கிறது. தன் அளவில் வாழ்வு அனைத்தும் ஆகும். தன் சொந்த தேவைக்காக அது செயல்படுகிறது. மனம் விழித்து யார், என்ன, எது, எப்படி என்ற கேள்விகளை எழுப்புகிறது. மனம் அனைத்தையும் தெரிந்து கொள்ள விரும்புகிறது. அதையும் கடந்து தான் பெற்ற ஞானத்தை அது பயன்படுத்த விரும்புகிறது. தன்னுடைய சுதந்திரமான சட்டத்தைப் பயன்படுத்த அது இதைச் செய்கிறது. சொந்தமான சட்டத்தை மற்றவர் பின்பற்றச் செய்யும் முயற்சியிது. ஜடம் அடங்குகிறது. ஜடம் மனத்தின் செயலை ஆமோதித்து உதவி செய்கிறது. கொஞ்சநாள் ஜடம் போராடுகிறது. தயக்கத்துடன் போராடுகிறது. அது போராடுவது ஓரளவுதான். அதைக் கடந்த நிலையில் பிடிவாதமான தமஸ் எழுகிறது. அது தடை செய்து மறுப்பை எழுப்புகிறது. மனத்தையும், வாழ்வையும் மேலும் போகக் கூடாது என ஜடம் கேட்டுக் கொள்கிறது. வெற்றி பகுதியானது. முடிவுவரை இது பயன்படாது. வாழ்வு வளர்ந்து நீடிக்க முயல்கிறது. அது வெற்றி பெறுகிறது. அமரத்துவத்தையும் அகன்ற வாழ்வையும் வாழ்வு நாடுகிறது. ஜடம் இரும்பாக எதிர்க்கிறது. குறுகி சாவது வாழ்வு. மனம் வாழ்வை ஆதரிக்கிறது. அது தன் பிரியத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்கிறது. அது ஞானத்தையும், ஜோதியையும் தழுவும். சத்தியத்தை நாடி ஞானமாகவும், ஜோதியாகவுமாக முயல்கிறது. அன்பையும், சந்தோஷத்தையும் அமுல்படுத்தி அவையாக மாற முயல்கிறது. எந்த நேரமும் திசை திரும்பலாம். ஜடவாழ்வின் சொரணை-களில் குறையுண்டு, தெளிவற்ற நிலையும் உண்டு. அது தடை, மறுப்பு. ஜடத்தின் புலன்களையும் ஜடத்தின் கருவிகளையும் அது மறுக்கிறது. குறை தன் ஞானத்தைத் தொடர்கிறது. இருள் பிரியாத தோழன். அது ஜோதியின் பின்னணி. சத்தியத்தைத் தொடர்ந்து பின்பற்ற முயற்சியுண்டு. வெற்றி கிடைத்தபின் அது சத்தியமாக இருப்பதில்லை. முயற்சி



தொடர வேண்டும். அன்புண்டு, ஆனால் அது திருப்தி தருவதில்லை. சந்தோஷமுண்டு. ஆனால் அது தான் செய்வது சரியென்று கூறாது. இரண்டிற்கும் விலங்குண்டு. தம் நிழலே எதிர்ப்பதாக அவை செயல்படுகின்றன. அவை கோபம், வெறுப்பு, பராமுகம், தெவிட்டுவது, கவலை, வலி. தமஸ் அஞ்ஞானத்தை வெல்வதைத் தடுக்கிறது. ஜடம், மனம் வாழ்வின் முயற்சிக்குத் தமஸை பதிலாகக் கூறுகிறது. மிருக பலம் எதிர்க்கிறது. அது அஞ்ஞானத்தின் பவர்.

இது ஏன் இப்படி என அறிய நாம் விரும்புகிறோம். இவற்றின் பின் ஒரு காரணம் உண்டு. தமஸ் வெற்றி பெற வேறொரு அடிப்படைக் காரணம் உண்டு. தமஸ் தடை செய்கிறது. அடிப்படைக் காரணம் பிரிவினை. அது மூன்றாம் அடிப்படைக் காரணம். பிரிவினையும் போராட்டமும் முடியுமிடம் இது. சத்தியம் பகுக்க முடியாதது. பிரிவினை செயலுக்கு முழு அடிப்படை. இந்தச் சட்டத்திலிருந்து விலகவும் ஜடம் அனுமதிக்கப்படவில்லை. அதற்கு இரண்டு முறைகள் உண்டு. இணைவதும், தொகுப்பும் அவ்விரு முறைகள். தன்னுள் ஈர்த்துப் பெறுவது அடுத்த முறை. ஒரு பகுதி மற்ற பகுதியால் அதற்கு அழிக்கப்பட வேண்டும். இவ்விரண்டு முறைகளும் அவை சாஸ்வதமான பிரிவினை என்று கூறுகின்றன. முதல் முறை இடைவிடாத பிரிவினையை விளக்குகிறது. சேர்ப்பதை விட இச்சட்டத்தை அவை வெளிப்படுத்துகின்றன. பிரிய வேண்டிய நிர்ப்பந்தம் முடிவானது என்றாகும். பிரிவது கரைவது. இருமுறைகட்கும் அடிப்படை மரணம். ஒன்று முறையாகக் கையாள்கிறது. அடுத்தது வாழ்வின் நிபந்தனை-யாக இதைப் பின்பற்றுகிறது. இரண்டும் வேறொன்றின் அவசியத்தைக் கூறுகின்றன. அது இடைவிடாத போராட்டம். உலக வாழ்விற்கு அப்போராட்டம் தேவை. பிரிந்த பகுதிகளின் போராட்டமிது. ஒவ்வொன்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறது. அவற்றின் தொடர்பைத் தொடர்கின்றன. அதை எதிர்ப்பவற்றை அழிக்கும் அல்லது நிர்ப்பந்தப்படுத்தும். அவை சேர்ந்து உணவாக மற்றதை விழுங்கும். அதுவே புரட்சி

செய்ய ஆரம்பிக்கிறது. நிர்ப்பந்தத்தினின்று ஓட்டம் பிடிக்கிறது. அடுத்தது விழுங்குவதினின்று தப்பிக்கிறது. ஜடத்தின் செயல்களில் வாழ்வின் சட்டம் வெளிப்படுகிறது. இந்த அடிப்படையை அது அங்குக் காண்கிறது. அது அதன் அனைத்து செயல்கட்கு மட்டும் உரியது. இந்தத் தவிர்க்க முடியாத நிபந்தனைக்குத் தலைவணங்குகிறது. மரணம் ஆசை, அளவு என்ற சட்டங்களை ஏற்க வேண்டியதாகிறது. விழுங்கவும், ஆளவும், ஆக்ரமிக்கவும் தொடர்ந்த போராட்டமுண்டு. இதுவே வாழ்வின் முதற்சட்டம். மனத்திற்குரிய சட்டம் ஜடத்தில் காணப்படும். அதே சட்டத்தை அது ஏற்க வேண்டும். அது செயல்படும் அச்சு, பொருளில் அவற்றை ஏற்க வேண்டும். அளவு என்ற அதே சட்டப்படிச் செயல்பட வேண்டும். நிலையான முடிவைக் காணாமல் தொடர்ந்த தேடலாகும் அது. தொடர்ந்து பெறுவதும் இழப்பதும் ஆன முறை அது. அதன் செயலின் அம்சங்களில் அதுவே உண்டு. மனிதன் தேடும் ஞானம் முடிவானதல்ல என நாம் காண்கிறோம். மனிதன் மனத்திற்குரியவன். சந்தேகமும் மறுப்பும் நிற்பதில்லை. அவனுடைய முயற்சியெல்லாம் கண்டிக்கப்படுகிறது. செயலும் மறுப்பும் மாறி வரும் அலைகளாகச் செயல்படுகின்றன. முடிவதும், அழிவதும் முறையாகும். சிருஷ்டி சுழலாக வரும். கொஞ்ச நாள் காத்து, நெடுநாள் அழிவதாக முடிகிறது. முடிவான நிலையான முன்னேற்றமில்லை.

நம் வாழ்வு உயிரும் மனமுமானது. அஞ்ஞானம், தமஸ், பிரிவினை ஜடத்திற்குரியன. மனமும், உயிரும் ஜடத்திலிருந்து எழுகின்றன. இம்மூன்றும் வலி, போராட்டம், நிம்மதி இன்மையை மற்றவற்றின்மீது திணிக்கின்றன. திருப்தி இல்லாமல் நிம்மதி அழிகின்றது. இந்த மூன்று நிலைகட்குரிய அதிருப்தியது. மனத்தின் ஜீவன் முழுவதும் அஞ்ஞானமாக இருக்கும்பொழுது அப்படியிருக்கும். பழக்கம் என்ற கூட்டினுள் இருந்தால் அப்படியிருக்கும். அப்படியிருந்தால் அதற்குத் தன் அறியாமையே தெரியாது, அல்லது அதன் சுற்றுப்புறம் தெரியாது. அது அனந்தமான ஜீவிய சமுத்திரம் என ஞானம்,



ஜடம் இந்தச் சூழலை விழித்துப் பார்க்கிறது. அது புதியதாக எழும் ஜீவியம், துல்லியமாக அதுபோல் எழும். முதலில் அது உலகில் அஞ்ஞானத்தைக் காண்கிறது. அது இவ்வுலகில் வாழ்கிறது. அது உலகையறிந்து அதை அடக்க வேண்டும். அதன்பின் அது சந்தோஷப்படலாம். இரண்டாவதாக அது தன் லிமிட்டை அறிகிறது. இது முடிவான வறட்சியுடையது. அது ஞானத்தின் வரம்பு. பவரும், சந்தோஷமும் பற்றாக்குறையாகவும், நிலையற்றுமிருப்பதால் இந்நிலை. அதை அனந்த ஜீவியமாக்க வேண்டும். இதற்கு ஞானமும் உயிரும் உண்டு. முடிவற்ற சந்தோஷத்தை அங்கேயே காணலாம். தமஸ், தடை. அதனால் நிம்மதியை அழிக்க முடியாது. அதிருப்தியை ஏற்படுத்த முடியாது. பரிணாம வளர்ச்சி பெறும் உயிருக்கு உயிரில்லா விட்டால் அப்படியிருக்கும். தன் அரைகுறை ஜீவனில், அளவுக்குட்பட்ட வாழ்வில் அது திருப்திபடலாம். அந்நிலையில் தன் அனந்தமான பவரை அது அறியாமல் இருக்கலாம். அதன் வாழ்வு அமரத்துவம் பெற்றது. அதனுள் பகுதியாக வாழ்கிறது. அதிலிருந்து பிரிந்து நிற்பது உண்மை. இம்முயற்சியை அதனுள் எதுவும் நாடாவிட்டால் அப்படி இருக்கும். அதன் அனந்தத்திலும், அமர வாழ்விலும் அது பங்கேற்கிறது. வாழ்வனைத்தும் அப்படியே இதை நாட முயல்கிறது. முதலிலிருந்து வாழ்வு இதையறியும். அதற்குப் பாதுகாப்பில்லை. அதனால் அது தன்னை வற்புறுத்திப் போராட வேண்டியுள்ளது. தன்னைக் காப்பாற்ற அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. முடிவாகத் தன் வாழ்வு லிமிட்டிற்கு உட்பட்டது என அறிகிறது. பெருநிலையை நோக்கி நகரும் உள்ளுறை உந்துதலை அது இப்பொழுது உணரும். அனந்தமும், சாஸ்வதமும் அழைப்பதை ஏற்றுச் செயல்படுவதில் முனைந்திருக்கும் நிலையது.

மனிதனில் வாழ்வு தன்னையறியும். அந்நிலையில் இந்த தவிர்க்க முடியாத போராட்டம் அவனுள் மாறுகிறது. அதிக நுணுக்கமாகப் போராட்டத்தை உணர்கிறான். அது முயற்சி, ஆர்வமுமாகும். அது தன் உச்சகட்டத்தை அடையும். வலியும்,

பிணக்கும் உலகின் நுணுக்கமாகின்றன. அவற்றை மனிதன் ஏற்றுத் திருப்தியடைய முடிவதில்லை. வெகுநாள் மனிதன் பொறுமையாக இருக்கலாம். தன் வரையறைகளை ஏற்று திருப்திபட முயலலாம். அல்லது தன் போராட்டங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம். ஜட உலகில் அது மட்டுமே முடியும் என்றாகிறது. மனிதன் அவ்வுலகில் வாழ்கிறான். தன் அறிவு வெற்றி பெறலாம் — அறிவாலோ, செயலாலோ — என அவன் நினைக்கலாம். அது வளரும் ஞானம். ஜடம் இறுகிய அமைப்புகளை வெல்லும் செயலது. அவை அவன் மனஉறுதிக்குரியன. சிறிய, தெளிந்த, தீவிரமானவை. உந்தும் சக்தியை அது அடக்கும். அது ஜடமான சக்தி. அவை பயங்கரமானவை. பெரும்பலனுண்டு. இங்கும் தன் லிமிட்டைக் காண்கிறான். அவை அரைகுறையான அர்த்தமற்றவை. தன் நிலையைக் கடந்து அவன் செயல்பட வேண்டும். சிறியது திருப்தியடைய முடியாது. அது நிலையானதல்ல. அது தன்னையறியும்வரை நிலையற்றிருக்க முடியாது. இருந்தாலும் தோற்றம் சிறிய ஜீவனாகிறது. தான் உண்மையில் அனந்தம் என அறிகிறான். அல்லது உள்ளதின் பெருமையை அதிகமாக உணரலாம். அல்லது முயன்று முன்னேறும் அகண்டத்தின் உந்துதலைக் காணலாம். இவை இரண்டும் சந்தித்துச் சுமுகமாகும்வரை அவன் திருப்தியடைய மாட்டான். அப்படியானால் அவன் அதை முழுமையாகப் பெறுவான். அவனையே அது முழுமையாகப் பெறலாம். எந்த அளவு என்பது வேறுபடலாம். அனந்தமாகத் தோன்றும் சிறியதாக அவனிருக்கலாம். அனந்தத்தைத் தேடுவதை அவனறியாமலிருக்க முடியாது. மனிதன் பூமாதேவியின் மூத்த பிள்ளை. அவனுக்குத் தெய்வம் உள்ள சாயல் தெரிகிறது. தன் அமரத்துவத்தை அகத்தில் உணர்கிறான். அல்லது தனக்கு அமரத்துவம் வேண்டும் என அறிகிறான். ஞானம் தட்டி எழுப்பும் சாட்டை. அது அவனை வழி நடத்துகிறது. சிலுவையில் அறையும் சிலுவை அது. அனந்த ஜோதியின் பவர், சந்தோஷம் அவன் பெறுவது. சிலுவையை அந்த ஜோதியின் மூலமாக மாற்றுகிறான்.



இதுவே முன்னேறி வரும் வளர்ச்சி. தெய்வீக ஜீவியம் — சக்தி வெளிப்படுவதன் வளர்ச்சியிது. இது ஞானமும் உறுதியும் ஆகும். அவை அஞ்ஞானத்துள் தம்மை இழந்தன. இது ஜடத்தின் தமஸ். இது மகிழ்வுக்குரிய மலர்ச்சியாக இருக்கலாம். அது சந்தோஷத்தினின்று அனந்தப் பெரு மகிழ்வுக்குப் போகலாம். பிரிவினையின் சட்டம் அதைத் தடை செய்கிறது. ஜடம் அந்தச் சட்டம் — பிரிவினை — உண்டுபண்ணியது. மனிதன் தன் சொந்த ஜீவியத்துள் சிறைப்பட்டுள்ளான். அது தனித்த மனம், வாழ்வு, உடல். நம் வளர்ச்சியின் இயற்கையான சட்டம் செயல்படுகிறது. மனம் இந்த இயற்கையான சட்டத்தைத் தடுக்கிறது. உடலுள் அது சட்டத்தைக் கொண்டு வருகிறது. கவர்ச்சியும் உதறித் தள்ளுவதும் அச்சட்டம் செய்யக் கூடியது. தாக்குதலும், காப்பதும்; பிணக்கும், வலியும் அச்சட்டத்திற்குரியவை. ஒவ்வொரு உடலும் ஜீவிய-சக்தியின் வரையறைக்குட்பட்டவை. அவை பிரபஞ்ச சக்திக்குரியவை. தங்கள் எல்லைகளை உடைத்து அவை உள்ளே வருவதைக் காண்கின்றன. வந்து தொடர்பு ஏற்படுத்தும் ஜீவியத்துடன் சுமுகமாக இருக்க முடியவில்லை. அது பெறும் ஜீவியம். அசௌகரியமும் வலியும் சொந்தமாகிறது. அது கவரப்படுகிறது. வெறுத்து ஒதுக்கப்படுகிறது. அது தன்னைப் பாதுகாக்க வேண்டும் அல்லது தாக்க வேண்டும். எந்த நேரமும் அது எதையாவது செய்தபடியிருக்க வேண்டும். அதற்குப் பிரியம் இல்லை, துயரப்பட முடியவில்லை. பிரிவினை என்ற சட்டம் உணர்ச்சியை உள்ளே அனுமதிக்கிறது. உடல் உணர்வையும், அதை உணரும் மனத்தையும் உள்ளே அனுமதிக்கிறது. அவை பெரும் பண்புகளுடன் — சந்தோஷம், கவலை — உள்ளே வருகின்றன. அன்பும், வெறுப்பும், சோகமும், மயக்கமுமாகும். அனைத்தும் ஆசையாகத் தோன்றும். ஆசையென்பதால் வலிந்து செயல்படும் ஆர்வம் காணப்படுகிறது. வலிந்து செயல்படுவதால் குறையும் சக்தியும் வளர்கின்றன. அது இயலாமை. சாதித்து ஏமாறும் ஏற்றத்தாழ்வு அது. உடைமை-யாகப் பெறுவதும், விட்டு அகல்வதும் மாறி வரும். தொந்தரவு, சிரமம், அசௌகரியம், நிலையாகும். மனம் தன் இயற்கையான

ஜீவனின் குறையை அறியும். அது மூவகைக் குறை, பற்றாக்குறை. மனம் தன் சொந்த சிறுமையைக் கருதும். அது உடல், வாழ்வின் சிறுமையுடன் வரும். மனத்தின் முழுமையுள் இரட்டைகளைக் கொண்டு வருகிறது. அதை குறை தொடர்கிறது. ஒளியை இருளும், சக்தியை பலஹீனமும் தொடர்கின்றன. சந்தோஷத்தைத் தொடரும் பொழுது அதை மறுக்கும் வலி எழுகிறது. சாதனை சாதித்ததால் அதிருப்தி தரும். இது சத்தியத்தின் தெய்வீகச் சட்டம் பெரும் சத்தியத்துள் செயல்பட வேண்டும். பதிலாக, இரட்டை எழுகிறது. இது உறுதி. பெரிய திருவுருமாற்றும் உறுதிக்குச் சரணடைய வேண்டும். சிறு திருப்தி வளர வேண்டும். புனிதமான உயர்ந்த திருப்தியை அவை நாட வேண்டும். இவையனைத்தும் ஆனந்த மறுப்பு. மும்மூர்த்தியான சச்சிதானந்த மறுப்பு. மறுப்பைக் கடக்க முடியவில்லையெனில் அது இருப்பதில் பலனில்லை. பெருவாழ்வு ஜீவிய சக்தி லீலையுள் நுழைகிறது. அது இயக்கத்தை நாட வேண்டும். தனக்காக மட்டுமல்ல, லீலையின் திருப்திக்காகவும்கூட. முடிவில் திருப்தி ஏற்படாவிட்டால், அதைக் கைவிட வேண்டும். அது வீண் வேலை. அது மாபெரும் தவறு. ஜீவனை ஏற்ற ஆன்மா பெற்ற ஜன்னியது.

வாழ்வில் நம்பிக்கையற்றவர் இந்த அடிப்படையை நம்புகின்றனர். இவ்வுலகில் நம்பிக்கையற்றவருக்கு அடுத்த உலகில் நம்பிக்கை ஏற்படலாம். அவை நம்மைக் கடந்த நிலைகள். அது பூவுலகைப் பொறுத்தவரை மாயையாகும். அது மனோமயப் புருஷனின் தலைவிதியாகும். அதுவும் ஜட உலகை நம்புகிறது. அவ்வாழ்வு பூவுலகில் ஆத்ம திருப்தி பெறுவதாகக் கூறுகிறது. ஜட வாழ்வின் சுபாவம் பிரிவினை. பிறவி எடுத்த மனமும், அதன் வித்தானதும் தன்னை அறியாமையாலும், அகந்தையாலும் அளவுக்குட்படுத்திக் கொண்டது. ஒரு விஷயத்தை நாடுவதும், தெய்வீக இலட்சியத்தைக் கருதுவதும், உலக லீலைக்கு முடிவு தேடுவதும் வீண். இல்லாததை நாடுவதாகும். மோட்சத்தில்தான் வாழ்வும் ஜீவியமும் இணைய முடியும். தெய்வீக ஆனந்தத்தில் அவை மீண்டும் சேரும். அது உலகுக்குரியதல்ல. ஆத்மாவின்



ஆழ்ந்த அமைதியில் மட்டுமே அது முடியும். தோற்றமான உலக வாழ்வில் அது நடக்காது. அகண்டம் தன்னை மீண்டும் அடையலாம். தன் செயல் தவறு என விலகிச் செயல்படலாம். தன்னைக் கண்டமான அணுவில் காண முயலலாம். அச்செயலைத் தவறு எனக் கருதலாம். மனத்தின் ஜீவியம் ஜட உலகில் எழுகிறது. தன்னுடன் எந்த தெய்வீகப் பூரணத்தையும் அது கொண்டு வாராது. பிரிவினை மனத்தின் சட்டம், ஜடத்திற்குரியதல்ல. ஜடம், மனம் எழுப்பிய மாயை. மனம் தன் சட்டமான பிரிவினையையும், அறியாமையையும் ஜடத்துள் கொண்டு வரும். மனத்தின் இம்மாயையுள் ஒருவன் தன்னைக் கண்டறியலாம். பிரிந்த வாழ்வுக்கு மூன்று அம்சங்கள் உண்டு. இம்மூன்று நிலைகளுக்குள் உலவ வேண்டும். பிரிவினையை ஏற்படுத்தியது மனம். அங்கு ஆத்ம ஐக்கியத்தைக் காண முடியாது. அல்லது ஆன்மீக வாழ்வின் சத்தியத்தையும் அங்கு காண முடியாது.

பிரிவினை சட்டம் ஜடத்தில் உள்ளது. அது பிரிக்கும் மனத்தால் மட்டுமானது. ஜட வாழ்வில் மனம் நுழைந்து தங்கியது உண்மை. அந்த ஜடவாழ்வில் சுய ஜீவனில்லை. அது மூலத்தில் உற்பத்தியான தோற்றமல்ல. அது ஒரு அம்சமே. அனைத்தையும் பிரிக்கும் வாழ்வின் சக்தியால் ஏற்பட்டது அது. அனைத்தையும் பிரிக்கும் மனத்தின் சிந்தனையை அது செயல்படுத்துகிறது. ஜீவனை மனம் இத்தோற்றமாக மாற்ற செயல்படுத்துகிறது. அவை அஞ்ஞானம், தமஸ், பிரிவினையாலானவை. இச்செயலால் கட்டடம் எழுப்பும் மனம் தன் செயலில் தன்னை மறந்து விடுகிறது. மனம் தன் சிருஷ்டியில் தன்னை இழக்கிறது. அது ஓர் இருட்டறையில் ஏற்பட்ட சிறை. மனம் தானே செப்பனிட்ட விலங்குகள் அவை. மனம் அவற்றால் கட்டுப்பட்டது. மனம் கட்டடமாக எழுப்புவது சிருஷ்டியின் முதல் சட்டம் என்பது உண்மை. மனத்தின் ஜீவன் ஜடம், வாழ்வுடன் பலனின்றிப் போராட்டம் நடத்துகிறது. அவற்றைத் தோற்கடித்துத் தானும் அவற்றால் தோற்கடிக்கப் படுகிறது. பலனற்ற இச்செய்கையை நெடுங்காலம் மீண்டும் மீண்டும் ஜடம் செய்கிறது. பிரபஞ்ச வாழ்வின் உயர்ந்த

செயலாகும் அது. அதுவே சிருஷ்டியில் முடிவாகும். அப்படிப்பட்ட முடிவை ஏற்கும் அவசியம் நமக்கில்லை. மாறாக, ஆத்மா திரைமறைவில் செயல்படுவது உண்மை. ஜடப்பொருளின் கனத்த இருளில் அது செயல்படுகிறது. இருள் ஜடத்திற்கு ஆடையாகக் காண்கிறது. சத்திய ஜீவியத்தின் சுப்ரீம் சிருஷ்டித்திறத்தால் அது செயல்படுகிறது. சத்திய ஜீவியம் மனத்தின் பிரிவினையை அனுமதிக்கிறது. ஜடத்தின் சட்டம் தாழ்ந்த நிலையால் ஆளப்படுவதை அது அனுமதிக்கிறது. இந்த நிபந்தனைகள் ஆரம்ப நிலைகளே. ஏகன் அநேகன் என்ற தத்துவப்படி நடப்பவை இவை. சொல்லப்போனால், நாம் வேறொரு சட்டத்தைக் காண்கிறோம். பிரபஞ்சத்துள் மறைந்திருப்பது மனத்தின் ஜீவனல்ல. மறைந்து உள்ளது அனந்த ஜீவன். அது ஞான உறுதியாலானது. அவை ஜடத்துள்ளிருந்து வாழ்வு மனமாக வெளிவருகிறது. மற்றவை இன்னும் வெளிவரவில்லை. ஜட இருளாகத் தோன்றுவதி-லிருந்து ஜீவியம் எழுகிறது. அது வேறொரு முழுமையான அம்சமாக இருக்க வேண்டும். அது சத்திய ஜீவிய ஆன்மீக ஜீவனாக இருக்க வேண்டும். அது மனம், வாழ்வு, ஜடத்தின் மீது உயர்ந்த சட்டத்தை அமுல் செய்யத் திணிக்கிறது. அது பிரிக்கும் மனம். அதனால் இது நடக்கும் சாத்தியமாகிறது.

அப்படிப்பட்ட சத்திய ஜீவன் மனத்தை அம்முடிச்சிலிருந்து விடுதலை செய்யும். அது பிரிந்த நிலையின் முடிச்சு. அதற்கு உபகருவியுண்டு. அக்கருவிக்குரிய செயலுண்டு. மனம் தனி மனிதனை உருவாக்குவது அப்படிப்பட்ட செயல். அது பயனுள்ள உதவி. நாம் அதைக் கண்டோம். சத்திய ஜீவியம் அனைத்தையும் தழுவுவது. அவன் வாழ்வையும் விடுவிப்பான். வாழ்வும் பிரிந்த நிலை வாழ்வினின்று விடுவிக்கப்படும். தனி மனிதனை உற்பத்தி செய்வது ஒரு உபசெயலாகவே பயன்படுத்தப்படும். சித்-சக்தியின் உபசெயலது. அது தன் ஜீவனையும், சந்தோஷத்தையும் பூர்த்தி செய்து கொள்கிறது. அதைச் செய்ய பலதரப்பட்ட ஒற்றுமையை அது நாடுகிறது. ஏன் அது உடலின் வாழ்வை விடுதலை செய்யக் கூடாது என்று சொல்ல முடியாது. தற்சமயம் அது மரணம் என்பதன் பிடியுள்



உள்ளது. அதுவும் பிரிவினைக்குட்பட்டது. பரஸ்பரம் விழுங்கும் சட்டம் அது. இங்கும் தனிமனிதனை உருவகம் செய்வதை உபசெயலாகப் பயன்படுத்துகிறார்கள். ஜீவனுள்ள வாழ்வின் ஒற்றுமையின் ஓர் அம்சம் அது. அணுவில் அனந்தம் பெறும் சந்தோஷத்திற்கு அது பயன்படுகிறது. ஏன் ஆத்மா சுதந்திரம் பெறக் கூடாது என்பதில்லை. ரூபத்தின் சுதந்திரமான செயலில் அது விடுதலை பெறலாம். அது தன்னையறியும் அமரத்துவம் பெறலாம். ஜடத்தின் ஆடையை மாற்றுவதிலும் அது அப்படி இருக்கலாம். ஆன்மாவின் ஆனந்தம் சுயமானது. அவ்வுலகம் அழகு அன்பு ஐக்கியத்தால் நிறைந்தது. ஜட வாழ்வெனும் உலகில் மனிதன் வாழ்கிறான். திருவுருமாற்றம் அவன் மூலமே நிகழும். மனம் சத்திய ஜீவியமாக மாறும் திருவுருமாற்றம் அது. முடிவாக அதை நாம் அடைய முடியும். தெய்வீக மனமும் உற்பத்தியாகலாம். தெய்வீக வாழ்வும் தெய்வீக உடலும் எழும். அச்சொற்றொடர் அதிர்ச்சி தரலாம். இந்த நேரம் மனிதனுக்குச் சிந்தனையில் எழும் வாய்ப்பாகலாம்.

ஒரு விஷயம் குறுக்கே நிற்கலாம், தெய்வீக உடல் முடிவான சட்டம். ஜடத்தைப்பற்றிய நம் அபிப்பிராயத்தால் அது நிர்ணயிக்கப்படும். தற்சமயம் இந்தச் சட்டம் ஒரு விஷயத்தைப் பொறுத்துள்ளது. தெய்வம் தன்னை அறிகிறது. தெய்வம் அறியும் பொருளுண்டு. இவற்றிற்குள்ள தொடர்பு இச் சட்டத்தை ஏற்படுத்துகிறது. வேறு தொடர்புகளும் இருக்கலாம். அச்சட்டங்கள் இன்னும் பூவுலகில் எழவில்லை. அப்படியானால் நம்மைக் கடந்த சொர்க்கத்திலிருக்கலாம். வாழ்வின் வேறு லோகங்களில் அச்சட்டம் நடைமுறையிலிருக்கலாம். அதுவே நிலைமையென நாம் கொள்ளலாம். அதுவே உண்மையானால் தெய்வத்தில் மனிதன் பூர்த்தியாவது முழுவதும் சொர்க்கத்தில் இருக்கும். மதங்கள் அப்படிக் கூறுகின்றன. அது மட்டுமல்ல. தெய்வம் நடத்தும் லோகம் என்பது அக்கருத்து. அந்நிலையில் பூலோக வாழ்வு சிறப்பாக இருக்கும். அதை மாயை என விலக்க வேண்டுமா? இந்தச் சிறப்பு அகத்திற்குரியது என நாம் முடிவு செய்யலாம். நம்மை அது தயார் செய்யும் அல்லது அதுவே முடிவான வெற்றியா? மனமும், ஆத்மாவும் ஏற்கனவே

விடுதலை செய்யப்பட்டன. அடுத்தாற்போல் வெற்றி பெற வேண்டியது ஜடம். ஜடத்தை வெல்ல முடியாது, இதுவரை வெல்லவில்லை. கட்டுக்கடங்காதது ஜடம். மண் விழித்து அறியாதது. தெய்வீகப் பொருளை நாம் வேறு இடத்தில் தேட வேண்டும். நிச்சயம் அது ஜடத்தின் வேறு நிலையாக இருக்கும். நிச்சயம் ஓர் அடுக்குண்டு. அது உயரும் தெய்வீகப் பொருள். வேறொரு நிலையுமிருக்கலாம். அது ஜடம் மாறிய நிலையாகும். உயர்ந்த சட்டத்தை ஏற்பதால் ஏற்படும் நிலையது. தன் சட்டத்தைக் கடந்த நிலையது. இருந்தாலும் அது அதன் சொந்த சட்டம். எப்பொழுதும் இரகஸ்யமாக உள்ளே வித்தாக இருந்த நிலையது.

## ஜீவிய மணி

நல்லெண்ணம் மனதைக் கனிய வைக்கும். சொல்லில் சூடு இருப்பதை விலக்கும். உணர்வில் கடுமையை அழிக்கும். உடல் துர்நாற்றத்தை எடுக்கும். வியர்வையும் தெளிவாக இருக்கும். நல்லெண்ணம் உபரியாகி, ஜீவன் நிறைந்து உடலாலும் (ஜடம்) வெளிப்படுமானால் அவரால் எதுவும் பூர்த்தியாகும். நாட்டையும் காக்க முடியும். ஆன்மீக நல்லெண்ணம் அதிக சக்தி வாய்ந்தது. அது மனதில் (descent) கீழிறங்கி வெளிப்படுதல், உணர்வில் வெளிப்படுதல் கடைசிக் கட்டம். சைத்தியப் புருஷன் நல்லெண்ணத்திற்கு உரியவன் என்பதால் இது ஆன்மீக சக்தி சைத்திய சக்தியாகிக் கீழிறங்குவதால் வலிமை உயர்ந்து இருப்பதாகும்.

நம் மனநிலைக்குரிய பாஷையில் சொன்னால்,
நாமுள்ள ஸ்தாபனத்தின் தலைவரின் அந்தஸ்தைப்
பெற்றுத் தரக் கூடியது.
இதன் வீச்சு முழுமையானால், நம் ஸ்தாபனத்தின்
வருமானம் நமது வருமானமாக முடியும்.





## Page 154: But now the Light supreme is far away
### இந்த நேரம் அந்தப் பெருஞ் ஜோதி விலகி நின்றது

- தெளிவான நம் வாழ்வு கண்மூடி சட்டத்தை ஏற்கிறது
- குருட்டு ஆசைகளும், அறியாமையின் இலட்சியங்களும்
- மாறுவேடத்திலுள்ள எதிரியை மனம் நாடுகிறது
- சிதைந்த கிரீடம், மனம் பெற்ற வெற்றிகள்
- மெதுவாக மாறும் நியதி நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டம்
- ஆத்மா விடுதலை பெறும்வரை இதுவே நம் கதி
- திருவுள்ளத்தின் திருக்கரம் அறிவின் வானத்தைச் சுருட்டி மடக்குகிறது
- அனந்தம் அணுவைப் பேணுகிறது
- இயற்கையெழுந்து யுகாந்த ஜோதியை ஏற்கிறது
- இத்தாழ்ந்த வாழ்வின் கனவு கலைந்தது

- புரியாத புதிரான இவ்வாழ்வின் ஆரம்பத்தில்
- பிரம்மாண்டமான முரட்டு யந்திரம்போல் விளங்கும்
- திரைமறைவிலிருந்து மெதுவாக எழும் ஆத்மாபோல
- சுவரில்லாத இவ்வறை சுழன்று வருகிறது
- எங்கும் எழுந்தருளியுள்ள ஏகன் அவனே
- தன்னையறியாதவன்போல, நம் கண்ணுக்குப் புலப்படாமல்
- ஜடம் இருளாகி இரகஸ்ய வடிவம் பெற்று அற்புதத்துள்
- அதுவும் அவனே, எதுவும் அவன் செயலே
- அனந்த சூன்யம் அடிகொண்டு கிளறும் ஆர்ப்பாட்டம்
- ஆன்மா ஜடமாகி சூறாவளியின் சுழலாயிற்று
- உணர்வும் ஆன்மாவுமின்றி உழலும் உடலின் உறக்கம்

- விளங்கும் ரூபம் விசாலமாகப் பரவும்
- சூன்ய மௌனம் அளிக்கும் ஆதரவு
- பிரம்ம ஜீவியத்தில் எழுந்து உலவியது
- சொரணையற்ற புற உலகத் தோற்றம்
- பார்க்கும் மனிதரில்லை, உணரும் உள்ளமுமில்லை
- ஜட இருளின் அற்புதம் கொலு வீற்றுள்ளது
- சூட்சும அசகாயசூரன் கடை விரித்தான்
- மந்திரப் பலனுக்கு மாயக்களைக் கண்டான்
- சிருஷ்டியின் மகத்தான மகிமைகளை நிர்வகித்தான்
- ஊமை விவேகத்தின் யந்திர சலனம்
- தவிர்க்க முடியாத எண்ணம், தலையில் உதிக்காதது
- இறைவனின் அறிவை செயல்படுத்த முயன்றது
- உயர்ந்த மறைபொருளின் உறுதியை உலகுக்களித்தது

## ஜீவிய மணி

மனமாற்றத்தின் அம்சங்கள்:

- நல்லவனாக இரு.
- எண்ணத்தாலும் தூய்மையாக இரு.
- எண்ணத்தின் உற்பத்தி ஸ்தானத்திலும் தூய்மையாக இருக்க வேண்டும்.
- தீமைக்கு எதிரான நல்லது, சிறிய நல்லது.
- தீமையோடு தொடர்பற்ற நல்லதே பெரிய நல்லது, முழுமையான நல்லது.
- எண்ணத்திலும், உணர்விலும், செயலிலும், அவற்றின் உற்பத்தி ஸ்தானத்திலும் நல்லது மட்டும் உள்ள நல்லவனாக இருத்தல் வேண்டும்.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/1. அழிய வேண்டிய நினைவுக்குச் சமர்ப்பணம் தன் அம்சத்தைக் கொடுத்துச் சமர்ப்பணமாக மாற்றுகிறது.

- நினைவும், சிந்தனையும் மனத்தின் திறமைகள்.
- சமர்ப்பணம் முழுமையாகும் பொழுது முதலில் நினைவும், பிறகு சிந்தனையும் கரையும்.
- மனித முயற்சி தெய்வச் செயலாவது சமர்ப்பணம்.
- மனித முயற்சி தவறல்ல, மனிதனை ஆட்கொள்ளும் அகந்தையின் எழுச்சி தவறு.
- அகந்தையும் தவறற்ற நாட்கள் இருந்ததுண்டு.
- மனிதன் வளர அகந்தை உதவிய நாட்கள் உண்டு. இப்பொழுது அகந்தை தடை.
- கல்லூரி மாணவன் பரிட்சைக்குப் படிக்காமல், கதை படிப்பது தவறு.
- முதியோர் கல்விக் கூடத்தில் கதை படிப்பது கல்வி கற்பதாகும்.
- நம்மவருள் நினைவு வலுவாக உள்ளவருக்குப் பிரபலம் உண்டு.
- பலரும் கண்டு பாராட்டுவர், ஆச்சரியப்படுவார்கள்.
- அறிவு வளர்ந்த நிலையில் நினைவைவிட, சிந்தனைக்கு மரியாதையுண்டு.
- யோகிக்குச் சிந்தனையே மௌனத்திற்குத் தடை செய்யும்.
- அவருக்கு நினைவு பெரிய தடை.
- சத்திய ஜீவிய சக்தி கருவியையும் உயர்த்தும்.
- ஸ்பூனால் சாப்பிட்டால், ஸ்பூனுக்கு ருசி தெரியாது.
- சமர்ப்பணம் சத்திய ஜீவிய சக்தி.

- சமர்ப்பணத்திற்கு உதவும் நினைவு, சமர்ப்பணத்தால் தன் ஜீவியம் வளர்வதைக் காணும்.
- சமர்ப்பணத்தை மேற்கொள்பவனுக்கு நினைவும், சிந்தனையும் அழிய வேண்டும்.
- தொடர்ந்த சமர்ப்பணம் நினைவைப் பயன்படுத்துவதால் நினைவு தீட்சண்யம் பெறும் என நாம் நினைக்கலாம்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் என்பதுபோல, சமர்ப்பணத்தை அனுமதிக்கும் நினைவும் சமர்ப்பணத்தின் பலன் பெறும்.

  இதனால் நினைவு தன்னையறியாமல் சமர்ப்பணமாகும். சமர்ப்பணமாகும் நினைவு, அழியும் நினைவு.
- திருடனை வாழ்நாள் முழுவதும் கண்டு பிடிக்கும் போலீஸ்காரனுக்கும் திருட்டுப் பழக்கம் வரும் வாய்ப்புண்டு.
- நல்லதையே தொடர்ந்து செய்யும் தவறானவர்க்கும் நல்ல பழக்கம் வரும் வாய்ப்புண்டு.
- இயல்பான கோபமுடைய ஜட்ஜுக்கு இருதரப்பு வாதத்தைப் பொறுமையாகக் கேட்பதால், கோபம் குறைந்து சாந்தம் வருவதுண்டு.
- எதிராகவும் சட்டம் செயல்படும்.
- சர்வீஸ் முழுவதும் அமைதியாக வக்கீல் பேசுவதைக் கேட்டிருந்த ஜட்ஜுக்கு இயல்பான கோபம் அடங்கி உள்ளே வளர்ந்து ஓய்வு பெற்றபின் அதிகமாவதுண்டு.
- சமர்ப்பணத்தின் கருவியாகத் தொடர்ந்து செயல்பட்ட நினைவும் சமர்ப்பணத்தால் பாதிக்கப்பட்டு அழியும் வாய்ப்புண்டு.
- நினைவு அழிந்தால் சமர்ப்பணம் வளரும். நினைவழிந்த மனம் லயத்தை நாடும்.
- லயம் சித்திக்க நினைவும், சிந்தனையும் அழிய வேண்டும்.
- நினைவழிவது லயம் சித்திப்பதில் முதற்பகுதி.

★ ★ ★



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## யோகத்தைப்பற்றிய பொதுவான கருத்துகள்

கர்மயோகி

- யோகத்தின் சிறப்பை வாழ்வில் தெரிவிப்பது யோகமடித்தது என்ற சொல்.

  வாழ்வில் யோகம் அதிர்ஷ்டம் என்பது வழக்கு.
- தவம், யோகம் என்ற இரு சொற்கள் குறிக்கும் வாழ்வின் அம்சம் மோட்சத்தை நாடுவது.
- நிஷ்டை, தியானம், சமாதியில் முடிவது தவம்.

  தவம் என்பது கடுந்தவம் என்று அறியப்படும்.

  தவம் அக்னியாகும்.

  ஆத்மா தழலாக எழும் அக்னி தவம்.

  புலன் அவிந்து அழிவது கடும் தவம்.

  சூடு போட்டாலும் தெரியாத நிலை சமாதி.
- நிர்விகல்ப சமாதி முடிவான சமாதி.
- மனிதரில் சிரேஷ்டமானவர் செய்வது தவம்.
- ஹட யோகம், லய யோகம், கர்ம யோகம், பக்தி யோகம், மந்திர யோகம், தந்திர யோகம், ஞான யோகம் எனப் பலவகை யோகமுண்டு,
- ஆசனம், பிராணாயாமம், மந்திரம், ஜபம், தியானம், நிஷ்டை, விரதம் ஆகியவை கருவிகள்.
- பூரண யோகத்தில் சமர்ப்பணம் மட்டுமே தத்துவம்.
- சமர்ப்பணம் தவிர வேறு எதுவும் இங்குப் பயன்படுத்துவது இல்லை.
- ஹட யோகம் உடலைக் கருவியாகக் கொண்டது

  கர்மயோகம் பிராணனைக் கருவியாகக் கொண்டது.

ஞான யோகம் எண்ணத்தைக் கருவியாக்கியது.
ராஜ யோகம் முழுமனத்தையும் கருவியாக்கும்

- பூரண யோகம் உடல், பிராணன், மனம், ஆத்மா அனைத்தையும் கருவியாக்கும்.
- துறவிக்குத் தவம், அது துறவறம்.
- அவனுக்கு உடல் எதிரி, பெண் விலக்கு, வாழ்வு துறக்கப்பட வேண்டியது.
- புலன் அவிந்து அழிந்தால் மனம் அலைபாயாது.
அது முதல் நிலை மௌனம்.
- சிந்தனை அழிவது அடுத்த நிலை மௌனம்.
- மௌனம் பெற்றவர் முனி.
- முனிவர் துர்வாசர், அவதாரப்புருஷனான கிருஷ்ண பரமாத்மாவுக்கு வரம் அளித்தார்.
- மௌன விரதம் சக்திவாய்ந்தது. முனிவர் கோபப்பட்டால் சபிப்பார்.
அவருடைய கோபமான பார்வை அவர்மீது எச்சமிட்ட கொக்கை எரித்தது.
கணவனுக்குப் பணிவிடை செய்யும் கற்புக்கரசிக்கு முனிவர் மனத்திலுள்ள எண்ணம் தெரியும். கொக்குபோல் அவர் கோபத்திற்கு அவள் ஆளாகமாட்டாள்.
- நளாயினியின் கற்பு காலத்தைக் கட்டுப்படுத்திற்று.
- அனுசுயாவின் கற்பு திரிமூர்த்திகளைக் குழந்தைகளாக்கியது.
- சாவித்ரியின் கற்பு எமனிடமிருந்து சத்தியவானை மீட்டது.
பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய சாவித்ரி எமனை அழித்து, இருள்மயமான காலனை ஒளிமயமாக்கி, உலகில் மரணத்திற்கு மரணம் கொண்டு வந்தாள்.
- பகவத் கீதையின் யோகம் ராஜ யோகத்தைவிடப் பெரியது.
பகவத் கீதையின் கருவி சரணாகதி, ஜீவாத்மா பரமாத்மாவுக்குச் சரணடைய வேண்டும்.



சகல தர்மங்களையும் சரணம் செய்தால் கிருஷ்ண பரமாத்மா மோட்சம் அளிக்கிறார்.

- பகவான் அலிப்பூர் சிறையில் கிருஷ்ணனை வணங்கினார்.
- விஸ்வரூப தரிசனம் பெற்றபின் கிருஷ்ணாவதாரத்தைக் கடந்து விட்டார்.
அர்ஜுனன் கண்ட விஸ்வரூப தரிசனம் இரண்டு. 1) உலகம் நன்மையாலானது. 2) உலகம் கோரமானது.
- பகவான் பெற்ற விஸ்வரூப தரிசனம் அவையிரண்டையும் கடந்த சத்திய ஜீவிய தரிசனம். அதில் கோரம் திருவுருமாறி அழிந்து விட்டது.
- விவேகானந்தர் கனவில் வந்து பகவானுக்கு சத்திய ஜீவியத்தைக் காட்டினார்.
அதன் சித்தி விஸ்வரூப தரிசனம்.
- சத்திய ஜீவியத்தை எப்படி அடைவது என விவேகானந்தர் கூறவில்லை.
- யோகம் முதிர்ந்து உடல் ஜோதிமயமாக, சின்மய தேகமாக ஆகலாம் என வேதமும், வைஷ்ணவமும் கூறுகிறது.
- அன்னை பகவானைச் சந்தித்த பொழுது கீதையின் யோகத்தை முடித்து விட்டார்.
- பகவானுக்கு சத்தியஜீவியம் உடலில் சித்திக்க அன்னை சிவபெருமானையும், கிருஷ்ணனையும் அவருடலில் வரச் சொன்னார். சிவன் மறுத்து விட்டார். கிருஷ்ணா பகவானுள் வந்தார். அன்னை அதை பகவானிடம் கூறிய பொழுது கடவுள்களால் எனது யோகம் சுருங்குவதை நான் விரும்பவில்லை என பகவான் பதிலளித்தார்.
- ஜீவாத்மாவை அடைவது மோட்சம். முதற் சித்தி.
- ஜீவாத்மா பரமாத்மாவில் கரைவது பெரிய சித்தி.
- பரமாத்மா பிரம்மத்துள் நுழைவது அதனினும் பெரியது.
திரும்பி வருவது எளிதல்ல.

- நுழைந்த ஆத்மா மேலும் உள்ளே சென்றால் திரும்ப வருவது அவதாரப்புருஷனால் மட்டுமே முடியும்.
- பிரம்மத்தின் மையத்தை ஆத்மா அடைந்தால் ஆத்மா கரைந்து விடும். ஐக்கியமாகும். திரும்ப வரலாம் என்ற பேச்சில்லை.
- பூரண யோகத்தில் ஜீவாத்மா பரமாத்மாவை எட்டித் தொட்டு பரமாத்மாவாகி பிரம்மத்துள் நுழையாமல் ஆத்மாவை பிரபஞ்ச ஆத்மாவாக்கி, புருஷனாக்கி அதை பிரம்மத்திற்கு உரிய ஈஸ்வரனாக்கும். அந்நிலையில் உலகம் அற்புதமாகும். நோய், மரணம், மூப்பு, இருள், திருவுருமாறி அழியும்.

★ ★ ★ ★

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நம்முள் உள்ள ஒவ்வொரு நல்ல குணத்திற்கும் எதிரான குணத்தை நம்முள் காண வேண்டும். அதேபோல், நம்முள் உள்ள ஒவ்வொரு கெட்ட குணத்திற்கும் எதிரான நல்ல குணத்தை நம்முள் காண வேண்டும். இரண்டும் சேர்ந்த முழுமையை அறிந்தால்தான், நாம் நம்மை முழுமையாக அறிகிறோம். நம்மை நல்லவர் என அறிந்து சந்தோஷப்படுவதோ, கெட்டவர் என அறிந்து கவலைப்படுவதோ மனித அறிவு, மனம் பெற்ற அறிவு, பகுதியானது. நல்லவர் தெரிந்தால், கெட்டவரைக் காண வேண்டும்; கெட்டவர் தெரிந்தால் நல்லவராகக் காண வேண்டும். இரண்டும் தெரியும்பொழுது முழு மனிதனைக் காண்கிறோம்.

**ஒரு பகுதியை அறிவதை விட்டு முழு மனிதனை அறிய வேண்டும்.**



## அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### 16. வாய்ப்பும் வேதனையும்

அன்பர்கள் இவ்வாறு அடிக்கடி கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்: “நான் அன்னையிடம் எதைப் பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டாலும், அது கிடைத்து விடுகிறது. வேறு சில சமயங்களில் நான் கேட்டது கிடைக்கக் கால தாமதமும் ஆகிறது. இவற்றைத் தவிர எனக்கு வேறோர் அனுபவமும் ஏற்பட்டிருக்கிறது. நான் கோராத அல்லது நினைத்துக்கூடப் பார்க்காத சிலவற்றையும் அன்னை எனக்கு வழங்கியுள்ளார்.”

மேலும் அவர்கள், “எதிர்பாராத விதமாக அவ்வாறு அதிர்ஷ்டம் வந்தவுடன் நான் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தேன். ஆனால் அந்த அதிர்ஷ்டத்தின் பலனை அனுபவிப்பதற்கு முன்னால் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சிக்கல்கள் ஏற்பட்டன. வாராதுபோல் வந்த அந்த அதிர்ஷ்டம் நமக்குப் பயன் தாராமல் மறைந்து விடுமோ? என்று மனம் கலங்கினேன். அன்னையிடம் வேண்டிக் கொண்டேன். வந்த சிக்கல்கள் மறைந்தன. ஆனால் வேறு புதிய சிக்கல்கள் தோன்றின. மறுபடியும் அன்னையிடம் வேண்டினேன். புதியதாய் வந்த புதிய சிக்கல்களும் மறைந்தன. ஆனால் சிறிதும் எதிர்பாராமல் வந்த அதிர்ஷ்டத்தைப் பதற்றம் இல்லாமல் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகையால் சிக்கல்கள் வருவதும் போவதுமாக இருக்கின்றன. வரவேண்டிய பலன் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கின்றது.

அதனால் ஏற்படுகிற வேதனையும், சலிப்பும் என்னை ஒரு நிலையில் இருக்க விடுவதில்லை. அதிர்ஷ்டமும் வேண்டாம்.

அது கொண்டு வருகின்ற பயனை அடைவதற்கு முடியாமல் அல்லலும் படவேண்டாம் என்ற விரக்தி நிலைக்கு நான் ஆட்பட்டிருக்கிறேன்" என்றும் அவர்கள் வருந்திக் கூறியிருக் கின்றார்கள்.

'இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் மட்டுமல்லாது, மற்ற அன்பர்களும் செய்ய வேண்டியது என்ன? தேடி வந்த வாய்ப்பை எவ்வாறு பயன்படுத்தினால் சிறப்பான பலனை அடையலாம்?' என்பனவற்றை இந்தக் கட்டுரையில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதற்கு முன்னால் சில அன்பர்களின் அனுபவங்களை இங்கே பார்ப்போம்.

இது ஓர் அமெரிக்க அன்பரின் அனுபவம்.

"ஸ்ரீ அன்னையைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு நான் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுப் புதுச்சேரிக்கு வந்தேன். அன்னை எழுதியுள்ள பல நூல்களை நான் படித்திருக்கிறேன். அதன் மூலம் எனக்கு அன்னையிடம் ஒரு விதமான ஈடுபாடு ஏற்பட்டது. அந்த நிலையில் அன்னை மையத்திற்கு வந்து அன்னையைத் தரிசித்தபின், இதுவரை நான் அறிந்திராத வகையில் என் உள்ளத்தில் ஓர் ஆழ்ந்த அமைதி குடிகொண்டு ஓர் உயர்ந்த நிலைக்கு என்னைக் கொண்டு சென்றது. மணிக்கணக்கில் மையத்தில் சூழ்ந்திருந்த அந்த அற்புதமான அமைதியைத் துய்க்க வேண்டும்போல் தோன்றியது. சாதாரணமாக என்னிடத்தில் உள்ள பதற்றமும் குழப்பமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, பிறகு முற்றும் மறைந்து போய்விடுகின்றன. மனத்தில் அமைதியும், மகிழ்ச்சி யும் நிறைந்து ததும்புகின்றன."

அங்கு ஒரு நாள் என் நண்பர் ஒருவரிடம் பேசும் வாக்கில் என் இடுப்பில் இருந்து வரும் ஒரு நெடு நாளைய வலியைப் பற்றித் தெரிவித்தேன். அதற்கு அவர், "இந்த வலி நீங்க வேண்டும் என்று நீங்கள் ஏன் அன்னைக்குப் பிரார்த்தனை



செய்து கொள்ளக்கூடாது?" என்று கேட்டார். 'இந்த வலி போக வேண்டும்' என்று அன்னைக்குப் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்பது, அவர் அதைப்பற்றிச் சொன்ன பிறகே எனக்குத் தோன்றியது. அடுத்த தடவை மையத்திற்குச் செல்லும்பொழுது வலியைப் போக்குமாறு அன்னையைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்."

"நான் பல வருடங்களுக்கு முன்னால் என்னுடைய காரின் பின்பக்கத்தில் இருந்த ஒரு மிகப் பெரிய பளுவான மூட்டையைக் கீழே இறக்கிய பொழுது என் முதுகுத் தண்டு வடத்தில் ஒரு பிறழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. வலியால் துடித்தேன். வைத்தியர்களிடம் ஓடினேன். அவர்கள் பரிசோதனை செய்து பார்த்து விட்டு, 'அதைச் சரி செய்து, அதனால் ஏற்படும் வலியை முழுவதுமாகப் போக்க முடியாது' என்று கூறி விட்டார்கள்."

"நான் வேறு வழியில்லாமல் அந்த வலியோடு இரவு, பகலாக என் நாட்களைக் கழிக்க வேண்டியதாயிற்று. இப்பொழுது அந்த வலி ஓரளவு குறைந்திருந்தாலும், அது முற்றிலும் என்னை விட்டுப் போவதாக இல்லை. அல்லும் பகலும் சித்திரவதைப்படுத்தும் இப்படிப்பட்ட ஒரு வலி, என்னுடைய விரோதிக்குக்கூட வரக் கூடாது."

நான் அடுத்த தடவை மையத்திற்குச் சென்றபோது சிறிது நேரம் தியானம் செய்தேன். பிறகு, 'என்னை வருத்தும் வலி நீங்கவேண்டும்' என்று அன்னையிடம் பிரார்த்தனை செய்து கொண்டேன். அப்போது என் மனம் மிக ஆழமாக எங்கேயோ ஓர் இடத்தில் சென்று பதிந்து விட்டது. நீண்ட நேரத்திற்குப் பிறகு நான் லயிப்பில் இருந்து விடுபட்டு என் இருப்பிடத்துக்குச் சென்றேன்.

மறுநாள் என்னைச் சந்திப்பதற்கு அந்த நண்பர் வந்தார். இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு

எனக்கிருந்த வலியைப்பற்றிய பிரச்சனைக்குத் திரும்பியது. நான் அப்போதுதான் அந்த வலி என்னைவிட்டுப் போய் விட்டதை உணர்ந்தேன். என்னைப் பல ஆண்டுகளாக வாட்டி வதைத்த அந்த வலி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. என்னையே என்னால் நம்ப முடியவில்லை. உண்மையில், அந்த வலி என்னை விட்டுப் போனதை நான் எப்படி உணராமல் ஒரு நாள் முழுதும் இருந்தேன்?

உண்மையில் யாருமே நம்ப முடியாத ஒரு நிகழ்ச்சி அது. அன்னை எனக்கு அளித்த மகத்தான பரிசு அது. என் மனத்தில் பலவிதமான உணர்வுகள் பொங்கிப் பெருக்கெடுத்தன. இப்போது வலி நீங்கி விட்டது. முன்பு செய்ய முடியாது என்ற எண்ணத்தில் ஒதுக்கி வைத்த காரியங்களை இனி எளிதாகச் செய்யலாம்.

என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவருக்குக்கூட இதுபோன்ற ஒரு வலி இருந்து வருகின்றது. அவரிடம் என் வலி போய்விட்டதைக் கூறவேண்டும். இதைப்பற்றி என் தந்தைக்கு எழுத வேண்டும். ஆனால் 'அன்னையின் அருளால் வலி மறைந்து விட்டது' என்று சொன்னால், அமெரிக்காவில் உள்ளவர்கள் எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று நினைப்பார்கள் என்றெல்லாம் நினைவுகள் ஓடின.

இரண்டு நாட்கள் சென்றன. அந்த வலி மறுபடியும் வந்து விட்டது. உடனே நான் அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டேன். வலி நீங்கியது என்றாலும் வலி முன்புபோல முழுவதுமாகப் போகவில்லை. கிடைத்த இந்த முழு விடுதலை நிலைக்காமல் போய் விட்டதே, அதற்கு என்ன காரணம்? அது புரியவில்லை. ஆனால் வேறொன்று புரிந்தது. வேண்டாத எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால்தான் அன்னை எனக்கு அளித்த நிவாரணத்தை நான் நழுவ விட்டுவிட்டேன் என்பது. இனி என்ன செய்வேன்? இழந்ததைப் பெறவும் முடியவில்லை. கிடைத்த ஆரோக்கியத்தை நிரந்-தரமாகக் காப்பாற்றிக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.



அது அந்த அமெரிக்கரின் அனுபவம் மட்டுமில்லை; அவஸ்தையும் கூட.

மற்றொன்று, ஓர் ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரியின் அனுபவம். அவரே கூறுகின்றார்:

"நான் அரசாங்கத்தில் பணி புரிந்து ஓய்வு பெற்ற பின்பு எனக்கு மாதாமாதம் ரூபாய் 45 பென்ஷனாகக் கிடைத்து வந்தது. அது குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இல்லை. மேலும் நான் ஓய்வு பெற்றாலும் ஓய்ந்து உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. அதனால் சவுக்கு விறகு வியாபாரத்தை ஆரம்பித்தேன். அது எனக்குக் கை கொடுத்தது. பதினைந்து வருடங்களுக்கும் அதிகமாகத் தொடர்ந்து செய்து கொண்டு வரும் அந்தத் தொழிலில் கிடைத்த வருவாயைக் கொண்டு 27 ஏக்கர் நிலத்தை வாங்கிச் சவுக்கை சாகுபடி செய்து வந்தேன். அதைத் தவிர எனக்குக் கொஞ்சம் சொத்தும் உள்ளது.

எனக்கு 78 வயதாகிறது. ஆகவே வியாபாரத்திலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, 27 ஏக்கர் நிலத்தை விற்றுவிடத் தீர்மானித்தேன் அது இன்றைய நிலவரப்படி ரூ.10,000 விலை மதிப்புள்ளது. ஆனால் நான் அதை ரூ.27,000க்குக் குறையாமல் விற்க வேண்டும் என்று முடிவு செய்து, அந்த விலைக்கு வாங்கக்கூடிய நபர்களைத் தேடி, ஐந்து வருட காலம் கடுமையாக முயன்றேன். ஒருவர் அந்த விலைக்கு என் நிலத்தை வாங்குவதற்கு முன் வந்தார். ஆனால் என்ன காரணத்தாலோ பிறகு அவர் வரவே இல்லை. அதனால் நான் ஏமாற்றமும் வேதனையும் அடைந்தேன். அந்த நிலையில் வேறொரு நபர் என் நிலத்தை ரூ.27,000க்கு விலைக்கு வாங்கிக் கொள்வதாக வாக்களித்தார்.

இந்தச் சமயத்தில் என் நண்பர் ஒருவர் அன்னையைத் தரிசனம் செய்வதற்கு என்னை, புதுச்சேரிக்கு அழைத்துச் சென்றார். நான் தரிசனம் செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பியவுடன் என்னை எதிர்பார்த்து ஒரு புதிய செய்தி காத்துக் கொண்டிருந்தது. அது என்னுடைய 27 ஏக்கர் நிலத்தை ரூ.81,000க்கு வாங்க ஓர் உரக்

கம்பெனி விருப்பம் தெரிவித்திருந்தது. அதை ஒட்டிய பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன. ஆனால் ஒப்பந்தம் செய்து கொள்ள இருந்த கட்டத்தில் முட்டுக்கட்டை போட்டது போலக் காரியம் திடீரென்று நின்றுபோய் விட்டது. அந்த நிறுவனத்துக்காக என்னிடம் விலை பேசிய அந்த நபர், போனவர் போனவர்தான். பிறகு வரவே இல்லை.

அதற்குப் பிறகு இரண்டு மாதங்கள் ஓடி விட்டன. அந்த நல்லதொரு வாய்ப்பு கை நழுவிப்போய் விட்டதை எண்ணி நான் இரவு பகலாகக் குமைந்தேன். இனிப் பைத்தியம் பிடிக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி. என்னை அந்தக் கட்டத்தை நோக்கி வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தது என் மனநிலை. எந்தக் காரைப் பார்த்தாலும், 'அந்த ஆசாமியின் கார்தான் வருகிறதோ?' என்று பரபரப்புடன் ஓடிப் பார்ப்பேன். எவர் வந்தாலும், 'அவர்தாம் வருகிறாரோ?' என்று ஆவலோடு பார்வையை ஓட்டுவேன்.

இறுதியில், வந்த அதிர்ஷ்டம் வழியோடேயே போய் விட்டது. 'தேடி வந்த அந்தப் பெருஞ் செல்வம் இனி வாராது. ஆகவே நிலத்தை ரூ.27,000க்குக் கேட்ட பழைய நபரைத்-தான் இனித் தேடிப் பார்க்க வேண்டும்' என்று என்னை நானே ஆறுதலும், தேறுதலும்படுத்திக் கொண்டேன். வேறென்ன செய்வது?"

அவருடைய கேள்வி சோகமான கேள்வி.

சொல்லப்போனால் சோகத்தை யாரும் அவருக்குத் தரவில்லை. அவரேதான் அதைத் தேடிக் கொண்டார். எப்படி?

அவருக்கு நில விற்பனையின் மூலம், அதன் பெறு-மானத்துக்கும் அதிகமான ஒரு பெருந்தொகை கிடைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அப்போது அவர் மனம் பலவாறாகப் பரபரத்தது. அங்கும் இங்குமாக ஓடி, வந்த வாய்ப்பை நெருங்க விடாமல் செய்துவிட்டது.



'இதற்கென்ன செய்வது? இதுபோன்ற ஒரு நிலையிலிருந்து மீள வழியுண்டா? கட்டுக்கடங்காமல் ஓடுகின்ற எண்ணங்-களைத் தடுத்து நிறுத்த ஓர் உபாயம் உண்டா?' என்பன முக்கியமான கேள்விகள்.

மேற்கூறிய இரு அன்பர்களின் அனுபவங்களின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது இதுதான். ஒரு பெரு வாய்ப்பு நம்மைத் தேடி வந்தவுடன், நம் மனம் பல திசைகளில் ஓட ஆரம்பிக்கின்றன. அந்த ஓட்டம் வந்த வாய்ப்பை நம்மிடம் வர விடாமல் செய்து விடுகின்றது; அல்லது வந்த வாய்ப்பின் முழுப்பலனையும் நாம் பெற்றுக் கொள்ள விடாமல் செய்து விடுகின்றது. அன்னை எப்பொழுதும் வழங்குகின்றார். அதை 'வேண்டாம்' என்று புறக்கணிப்பது மனிதனின் வேலை. 'மனிதன் திட்டமிடுகின்றான். கடவுள் அதைத் தடுத்து விடுகின்றார்' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஆனால் அன்பர்களின் விஷயத்தில் இந்தப் பழமொழி தலை கீழாக அமைந்துள்ளது என்று சொல்ல வேண்டும்.

"இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நீங்கள் மனத்தைக் கட்டுப்படுத்தி எண்ணங்களை மனத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியம்" என்று நான் அந்த அன்பர்களிடம் கூற முடியாது. ஏனெனில் எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது என்பது, இதுபோன்ற சூழ்நிலைகளில் நடவாத ஒன்றாகும். இதற்கு என்னதான் வழி?

அன்னையின் அருளால் நம்மை நாடி வந்த வாய்ப்புப் பலனளிக்க வேண்டுமானால், நம் மனம் அமைதியாகவும், பதற்றம் இல்லாமலும் இருக்க வேண்டும். எங்கு அமைதியும், நிதானமும், பொறுமையும், நம்பிக்கையும் உள்ளனவோ, அங்கேதான் அன்னையின் அருள் நன்றாகச் செயல்பட்டு முழுப் பலனையும் பெற்றுத் தருகின்றது.

மனத்தைக் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், இந்த உண்மையை, அதாவது குறையை ஏற்றுக் கொண்டு,

‘எவ்வாறேனும் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்’ என்ற முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த முடிவை எடுத்த பிறகு, எண்ணங்களின் பாய்ச்சல்களும், ஓட்டங்களும் ஓரளவு குறைந்து விடும் என்றாலும் எண்ணங்கள் முழுவதுமாக ஓய்ந்து போய்விடுவதில்லை. அப்போது அன்னையிடம், ‘எண்ணங்கள் என்னை விட்டு நீங்குமாறு செய்ய வேண்டும்’ என்று பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அன்னையின் அருளால் இருளான எண்ணங்கள் இற்று விழுந்து, அதுவரை வாய்ப்பை நெருங்க விடாமல் செய்திருந்த தடைகள் ஒவ்வொன்றாக நீங்கி, அந்த வாய்ப்பின் முழுப் பலனும் கிட்டுமாறு அமைந்து விடும்.

இந்த முறைகளைக் கையாண்டதால் இக்கட்டுரையில் குறிப்பிட்ட இரு அன்பர்களின் பிரச்சனைகளும் நீங்கி, அவர்கள் விரும்பிய பலனை வேண்டிய அளவுக்குப் பெற்று இன்புற்றார்கள் என்பதை இங்கு நான் மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த முறைகளே மற்ற அன்பர்களும் அனுசரிக்க வேண்டிய முறைகளாகும்.

★★★

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

❀ ❀ ❀

**அன்னையைத் தெய்வமாக வழிபட்டால்**
**பிரார்த்தனை பலிக்கும்.**
**அன்னையை அவதாரமாகப் பின்பற்றினால்**
**ஞானம் வரும்.**
**அன்னையைச் சக்தியாக நம்முள் ஏற்றால்**
**யோகம் பலிக்கும்.**



# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**4. புதியதாக ஒரு முயற்சி எடுக்கும் பொழுது அது சம்பந்தப்பட்ட விவரங்களை எல்லாம் அலசி, ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். முடிவைச் செயல்படுத்தும் பொழுது அதில் முழு உற்சாகம் இருக்க வேண்டும். செயல்படும் பொழுது வேலையை நேர்த்தியாகச் செய்ய வேண்டும். எனவே, இம்மூன்றும் இருந்தால் நமக்குத் தவறாமல் வெற்றி கிடைக்கும்.**

காய்தல் உவத்தலின்றி ஒரு பொருட்கண் நின்று ஆய்தல் அறிவுடைமை. **Well begun is half done** திட்டமிட்டு, ஆராய்ந்து, துணிந்து, உணர்ந்து, முறைகளை அறிவால் புரிந்து, உணர்வால் ஏற்று, எழுத்தால் எழுதி ஆரம்பித்தால் வேலை பாதி முடிந்ததாகப் பொருள் என்று ஆங்கில வாக்கியம் கூறுகிறது. வீட்டில் நடக்கும் திருமணத்தை முன்கூட்டி யோசனை செய்து வரப்போகின்றவர்களை ஒவ்வொருவராக மனதில் கொணர்ந்து அவர்கள் தேவையை, கருத்தை முக்கியமாகக் கருதி, வேலைகளை மனதில் வரிசைப்படுத்தி, ஒழுங்கு செய்து, காலம், நேரம், இடமறிந்து செயல்பட்டால், விசேஷம் முடிந்த பிறகு, “வேலை தானே தன்னைப் பூர்த்தி செய்து கொண்டது, யார் யாரோ வந்து எந்தெந்த வேலையையோ ஏற்று எதிர்பாராத முறையில் சிறப்பாகப் பொறுப்பேற்று செய்தது கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போலிருந்தது” என்று நினைக்கும்படி அமையும். அதுபோல் செயல்பட்டவர் உடனே அவருள்ள நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு உயர்வார். அதுவே செயல்படும் பாணியானால், அவர் முன்னேற்றம் தொடரும். உச்சியை எட்டும்வரை ஓய்வு பெறாது. எந்த நிலையில் ஆரம்பித்தாலும் எல்லா நிலைகளையும் கடந்து எட்ட முடியாத உயரத்தை எவரும் எட்டாத குறுகிய நேரத்தில் அடைவார். நெப்போலியன், அலெக்ஸாண்டர், சீஸர் அப்படி 30 வயதிற்குமுன், 20 வயதிலேயே உயர்ந்தவர் என்று வரலாறு கூறுகிறது. சங்கராச்சாரியார் 8 வயதில் தீட்சை பெற்று 16-இல்

சித்தி பெற்று 32-இல் வாழ்வை முடித்துக் கொண்டவர். சங்கரபாஷ்யத்தைப் படித்தவர் எப்படி ஒருவர் இந்த வயதில் இந்தத் தத்துவத்தை எழுதுவது என மலைப்பார்கள். ஒருவர் ஆபீசில் வேலை செய்பவரானால் இன்ஸ்பெக்ஷன் நேரத்தை அறிவார். அந்த நேரம் தயாராவதுபோல் மற்ற நேரங்களில் வேலை செய்தால் ஒரு வார வேலை ஒரு நாளில் பூர்த்தியாவதைக் கண்பார். அதுபோலவே அவர் தொடர்ந்து செயல்பட்டால் அங்கு தொடர்ந்திருக்கமாட்டார். உயர்ந்தபடி இருப்பார். உச்சியை எட்டுவார். இதுபோன்று செயல்பட்ட டாக்ஸி டிரைவர் முதலமைச்சரானார். காவல்காரன் பெரு முதலாளியானான். தலைவனான தொண்டர்கள் வேலை செய்யும் பாணி இது. அலெக்சாண்டர் டுமாஸ் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் எழுதிய Count of Monte Cristo என்ற நாவலில் கதாநாயகியாக வரும் Mercedes மெர்சடஸ் மீன் விற்பவள். அநாதை, படிப்பறிவற்றவள், உணர்ச்சிமயமான சிறப்பான செயல்பாடுடையவள். அவள் காதல் கருகியது. திருமணம் அவளை உயர்த்தி நாட்டில் முதன்மையான கட்டத்தில் ஒருத்தியாக்கி கோடீஸ்வரியாக்கியது. பிரபுவின் மனைவியாக பாரீஸ் பிரபுக்களிடையே சிறந்த உதாரணமாக வெகுசீக்கிரம் உயர்ந்தாள். உயர்வு உன்னதம் பெறும். உழைப்பின் சிறப்பு உயர்வு தரும். உள்ளம் உரியதை ஏற்று உரிமை என்ற எல்லைக்குள் தன்னை வலிய அடக்கிக் கொள்வது உழைப்பை உயர்வாக்கும். செகெண்டரி கிரேட் ஆசிரியர் M.L.C. ஆனது, பள்ளி ஆசிரியர் உலக ஆசிரியர் சங்க உப தலைவரானது, கல்லூரி ஆசிரியர் I.A.S. பெற்றது, பல்கலைக்கழக ஆசிரியர் நாட்டின் ஜனாதிபதியானது, வீரன் சேனாதிபதியானது, வீடு பெருக்குபவள் ராணியானது இந்தப்பாதையில் போனதால்தான். மேஜையில் சாப்பிட தட்டு, டம்ளர், ஸ்பூன், போர்க், கத்தி, 40 பேருக்கு வைக்க பட்லர் ஒவ்வொரு விருந்திற்கும் அவை இருக்க வேண்டிய இடத்தை முதலில் குறித்து வைக்க என்ன முயற்சி தேவை. நாடு முழுவதும் அதுபோல் தங்களைப் பயிற்றுவித்ததால், சிறிய நாடு பெரிய நாடுகளை ஆள்கிறது. 40 பேராசிரியர்கள் 40 ஆண்டுகள் முயன்று டிக்ஷனரி எழுதிய பொழுது, ஒருவரே அதை 7 ஆண்டில் எழுதியதின் இரகஸ்யம் இதுவே. ஆரம்பகாலத்தில் எந்த வேலையிலும் விரயம் அதிகமாகும். வேலை ஏராளமாகச்



செய்ய வேண்டியிருக்கும். நீண்ட காலம் தேவை. கொஞ்சநாள் கழித்துத் திறமை பெற்றபின் 10 பேர் 1 மாதத்தில் 60% சிறப்புடன் செய்தது 100% சிறப்பாக உயர்ந்து, நேரம் 3 நாளாகும். செய்வது ஒரே ஆளாகும். 1950-இல் இங்கிலாந்தில் 100 ஏக்கர் பண்ணையை ஒரே குடும்பம் நிர்வாகம் செய்தது. இன்று அமெரிக்காவில் 500 ஏக்கர் பண்ணையை Ph.D பட்டம் பெற்ற ஒருவரே நடத்துகிறார். இதை நாம் திறமை என்கிறோம். போலந்து நாட்டில் மின்விளக்குகள் வந்த புதிதில் அதைப் பொருத்த ஏணியின்மீது ஒருவரும், இருவர் ஏணியைப் பிடித்துத் திருப்புவதாகவும் கேலி செய்வதுண்டு. பகவான் ஸ்ரீ அரவிந்தர் 5 பெரிய நூல்களை ஒரே சமயத்தில் ஆர்யாவில் எழுத ஆரம்பித்து 6 ஆண்டுகளில் முடித்தார். டார்வின் எழுதிய பெருநூல் ஆயுள் முழுவதும் எழுதியது. மார்க்ஸ் எழுதிய நூலில் 3 பாகங்களில் முதற்பகுதியே அவர் வாழ்நாளில் முடிந்தது. மற்ற இரு பகுதிகளை அவர் ஆயுளுக்குப் பின்னால் அவர் நண்பர் பூர்த்தி செய்தார். பகவான் செய்ததை உலகில் இதுவரை எவரும் செய்ததில்லை. அத்துடன் 22,000 அடி நீளமுள்ள சாவித்திரி என்ற இதிகாசத்தை ஆயுட்காலத்தில் எழுதி முடித்தார். I.C.S அதிகாரிகளுக்கு உலகில் பெரும் புகழுண்டு. ஆங்கிலேயர் ஆண்ட நாட்களில் 400 பேரே நாட்டை ஆண்டனர். ஆண்டிற்கு 4 பேரை புதியதாக நியமிப்பது வழக்கம். அது பிறகு எட்டாயிற்று. 1947-இல் அவர்கள் நாட்டை விட்டுப் போகும் பொழுது ஆண்டில் 80 பேராயிற்று. Steel frame இரும்புக் கவசம் எனப் பெயர் பெற்ற அதிகாரவர்க்கம் I.C.S உலகப் புகழ் பெற்றது. அவர்கட்குப் பயிற்சி ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜில். சுபாஷ் சந்திர போஸ், பகவான் ஸ்ரீ அரவிந்தர், ஜோதிபாசு I.C.S பயில இங்கிலாந்து சென்றவர்கள். அவர்கள் பெற்ற பயிற்சியில் மேற்சொன்ன கருத்து ஒரு அம்சம். லூயி மன்னன் உலகிலேயே தலைசிறந்த மன்னன் எனப் பெயர் வாங்கியவன். அவன் பதற்றமடையும் நேரம் அரண்மனை கலங்கும். அப்படிப்பட்ட நேரம் அம்மன்னன் தன் வீரனைப் பார்த்து இரண்டு குதிரைகளைக் கொண்டு வா என்றான். வீரன் அவை தயாராக வெளியில் நிற்கின்றன என்றான். அரசன் காதலியைத் தேடி, கான்வெண்டில் கண்டு, மூர்ச்சை அடைந்தவளைத்தேற்றி, வீரனை விளித்து ஒரு வண்டி வேண்டும் என்றான். வெளியில் தயாராக நிற்கிறது என்றான். அரசன் உன்னைப்போன்ற

முன்யோசனைக்காரனைக் கண்டதில்லை என்றான். திறமை, சமயோசிதம், முன்யோசனை ஆகியவை செயல்பாட்டிற்குரிய சிறப்புகள்.

**5. அதிகாரம் செலுத்த வேண்டிய இடத்தில் அதிகாரம் செலுத்தி, சுதந்திரம் கொடுக்க வேண்டிய இடத்தில் சுதந்திரம் கொடுக்க வேண்டும். இப்படி அதிகாரத்தையும், சுதந்திரத்தையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டும்.**

இதுவரை உலகில் அதிகாரம், அதிக காரமாயிருந்தது, அது மாற வேண்டும் என்ற இலட்சியம் ஓரளவு பரவி வருகிறது. பரம்பரையாக நம் அனுபவத்தில் பையனுக்கு அளவு கடந்த செல்லம் கொடுத்து அழிந்த சொத்தும், மருமகனை வீட்டோடு வைத்திருந்து அழிந்தவரும் இதற்கு உதாரணமாக இருக்கிறார்கள். செட்டி நாட்டில் பெரும் பொருள் குவிந்ததற்கு அங்கு இளைஞர்களை சிறு கடைகளில் ஆளாக அமர்த்தி 1/8 ஆள், 1/4 ஆள், 1/2 ஆள், 3/4 ஆள், முழுஆளாகப் பயிற்றுவித்ததே ஒரே காரணம். பெரிய கம்பனியில் முதலாளி மகன் இளம் வயதில் நிர்வாகத்திற்கு வந்தால் அவனை கம்பெனி மானேஜருக்குக் கீழே வேலைக் கற்றுக்கொள்ள அனுப்பினால் பையனும், கம்பனியும் வளரும். நேரடியாகத் தகப்பனாருக்குரிய அதிகாரத்தை செலுத்தினால் பையனும், கம்பெனியும் அழியும். தன் மகனை ஒரு தாயார் அப்படி அழித்தார். ஒரு மந்திரி ஜில்லா தலைநகருக்கு வந்தபொழுது கலெக்டர் ஆபீசிற்கு கலெக்டர் வரவில்லை. மந்திரியுடன் இருந்தவர்கள் மந்திரியை கலெக்டர் நாற்காலியில் உட்காரச் சொன்னார்கள். "அது பெரிய போஸ்ட். நான் உட்காரக் கூடாது" என்றார் மந்திரி. அதிகாரம், பதவி, செல்வாக்கு என்பவை ஆரம்ப நாட்களில் அரசனுக்குரியது. அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என ராஜாவின் அதிகாரம்போல் நாட்டில் அடுத்தடுத்த நிலை நிர்வாகங்கள் உருவாகின. முடிவாக குடும்பம் ராஜ்ய சபையின் சாயல் பெற்றது. சிறு விவசாயியின் ஸ்தாபனம் அரசவைபோல் செயல்பட்டது. அரசன் ஏற்படுமுன் அவ் வதிகாரம் சேனைத் தலைவனிடமிருந்தது. பின்னர் சேனைத் தலைவன் அரசனாகும் பழக்கம் ஏற்பட்டது. யார் சேனைத் தலைவனாக வருகிறான்? போர் என்று மூண்டால் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் படைகள் ஒரு தலைவனுடன் வந்து



எல்லையில் குவியும். அவர்களுள் எல்லாத் தலைவர்களும் சேனாதிபதியாக விழைவார்கள். அப்பதவியை எந்த சட்டப் படியும் அங்கு நிர்ணயிப்பதில்லை. எதிரியை நேர்கொள்ள நம்படை நமக்கு அடங்க வேண்டும். நிலைமை ஆபத்தாகும் பொழுது 10 சிறுபடைத் தலைவரிருந்தால், எவர் முன்னணிக்கு வருவது என்பதை நிலைமை முடிவு செய்யும். யாருக்கு 10 படைகளும் அடங்குகிறதோ அவரே சேனாதிபதி. போர் முடிந்து வெற்றி பெற்றபின் அவரே அரசன். எல்லா அதிகாரமும் அவர் கையில், அரசனுடைய நிர்வாகத்தில் சிக்கலின்றியிருந்தால், பதவி தொடரும். புதிய நிலைகள், புதிய சிக்கலெழுந்தால், அதை சமாளிப்பவனே புதிய அரசன். நடைமுறையில் வெற்றி பெற்றது ஒரு நிலை. தோல்வியடைந்தது அடுத்தநிலை. வெற்றி பெற்ற அரசன் திறமை நீடிப்பதைவிட தோல்வி பெற்றவன் பெற்ற திறமை பெரிது. வெற்றி பெற்ற மனிதனை வெற்றி தன்னை மறக்கச் செய்யும். அதனால் அவன் ஏமாறும் சந்தர்ப்பங்கள் ஏராளம். தோல்வி பெற்றவனுக்கு எல்லா சந்தர்ப்பங்களும் எதிரியாதலால், அவன் பெறும் திறமை அளவற்றதாக இருக்கும். 1000 அல்லது இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் இந்தியாவிலும், உலகிலும் அரசர்கள் எல்லா அனுபவத்தையும் பெற்று விட்டனர். அதன் பிறகு தோல்விக்கு வழியில்லை. தெரிந்த சட்டத்தை மீறுபவன் தோற்கிறான். தெரிந்த சட்டத்தைப் புறக்கணித்து அரசன் தோல்வியடைவது மக்களுக்கு அனுபவம். அது போன்ற அனுபவம் அரசனுடைய திறமை மக்களிடையே அதிகமாகப் பரவ உதவும். இன்று இந்த சட்டத்தை நாம் முக்கியமாகக் கருதுகிறோம் எனில், இன்னும் இதை ஏற்க வேண்டிய மக்கட்பகுதியுண்டு என்று காட்டுகிறது. அன்பர்கள் பிரச்சனை தீரவில்லை என்ற பொழுது அவர்கள் தெரிந்த நல்ல முறையைப் பின்பற்றவில்லை. தெரிந்த தவறான முறையை மீண்டும் பின்பற்றுகிறார்கள் என்று நாம் காண்கிறோம். சமையல்காரன் 40-ஆம் வயதில் கையைச் சுட்டுக் கொள்வதும், 50-ஆம் வயதில் எளிய கேஸை வக்கீல் இழப்பதும், 60 வயது டாக்டர் டைபாயிட்டை குணப்படுத்த முடியாததும், ஆசிரியர் மக்கள் படிப்பைப் பூர்த்தி செய்ய முடியாததும், நெடுநாள் முதன் மந்திரியானவர் மகன் M.L.A-யாகவும் வர முடியாததும், நாட்டின் ஜனாதிபதி மகன்

வைஸ்சான்ஸ்லர் பதவி கடைசிவரை பெற முடியாததும், பெரிய அந்தஸ்திலுள்ளவர் சிறுகாரியங்களை செய்ய முடியாததும், பெரும்பாலான நடிகர் பெற்ற செல்வத்தை இழப்பதும், பெரிய மேதைகள், பெரும் தலைவர்கள் மக்கள் முன்னுக்கு வர முடியாததும் நாம் காண்பது. பெரும் செல்வர் மகனால் குடும்பம் நடத்தும் அளவு சம்பாதிக்க முடியாதது, 100 புத்தகம் எழுதியவர் மகளால் ஒரு புத்தகம் எழுத முடியாதது போன்றவை இக்குறையால் எழுவதாகும். தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாய்வது பெரும்பாலான அனுபவம். முன் தலைமுறை பெற்ற அனுபவத்தின் பெரும்பலனை ஏற்று அடுத்த தலைமுறை முன்னுக்கு வருவது, தகப்பனார் சிறு ஊரில் பிரபலமான வக்கீலானால், மகன் ஹைகோர்ட்டில் பிரபலமாவது நாம் ஏராளமாகக் காண்பது. தகப்பனார் M.L.A ஆனால் மகன் மந்திரியாவது பரவலாகக் காண்பது. நேரு பரம்பரை அப்படி ஓரளவு இருந்தது. காந்தி, இராஜாஜி பரம்பரையை நாம் கேள்விப்பட்டதேயில்லை. தாகூர் பரம்பரை என்ன ஆயிற்று எனத் தெரியாது. பென்னட் மக்கள் இருவர் சிறப்பாக இருந்தனர். லிடியா புல்லுருவியானாள். ஒரு பெண் தவறுவதால் குடும்பமே அழிவதுண்டு. ஒரு மகன் உயர்வதால் குடும்பமே உயர்வதுண்டு. வாழ்வில் உயர்வும், தாழ்வும் விரவிக் கிடப்பதால் இந்நிலை ஏற்படுகிறது. மேற்சொன்ன கருத்து அந்நிலைகளை உருவாக்க உதவுகிறது. பிறப்பு பெரிய காரணம். வளர்ப்பு முக்கியக் காரணம். படிப்பின் உதவி முக்கியம். சுபாவம் முடிவை நிர்ணயிக்கும். சந்தர்ப்பம் ஒரேயடியாகத் தூக்கியும் விடும். தாழ்த்தியும் விடும். பராமுக-மாகவும் இருக்கும். ஏதோ சிலர் வாழ்வில் பேருதவி செய்யும் பெருமக்கள் எழுவதுண்டு. அவற்றுள் பலன் பெறுபவர் மிகக் குறைவு. பெரும்பாலோர் சிறுபலனை வற்புறுத்திப் பெற்று பெரியதை இழப்பர். சிறுபான்மையோரே விவேகானந்தர் போல் குருவால் முன்னுக்கு வருபவர். இராமலிங்க சுவாமியின் உதவியை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அன்னை, பகவான் அளித்த பெறற்கரிய பேருதவியை பெறும் நிலையில் ஒருவருமில்லை.

(தொடரும்)



## அன்பர் கடிதம்

ஐயா,

என் பெயர் பழனிசாமி. வயது ஐம்பத்தேழு. நான் B. முட்லூரில் ஜமாய் முகமது தெருவில் சொந்தமாக வீடுகட்டி வசித்து வருகிறேன். நான் B. முட்லூர் அருகிலுள்ள கணக்கன் பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவன். ஐந்தாம் வகுப்புவரை படித்துள்ளேன். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். என் மனைவியின் பெயர் பானுமதி. ஐயா எனக்குள்ள பிரச்சனையின் காரணமாக என் உறவினர் மூலமாக B. முட்லூரில் செயல்படுகின்ற தியான மையத்திற்கு நவம்பர் முதலில் வந்து அன்னையை அறிந்தேன். என் பிரச்சனை என்னவென்றால் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் முஸ்லீம் நண்பர் ஒருவர் மூலமாக வீடு கட்டும் மனை விலைக்கு வந்தது. அந்த மனையை விலைக்கு வாங்கி, வீடு கட்ட வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசைக்கேற்றாற்போல் சொந்தமாக வீடு கட்டினோம். சொந்தமாக வீடு கட்ட ஆரம்பித்த நாள் முதல் பிரச்சனையும் ஆரம்பமானது.

அந்தத் தெரு முழுவதும் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்கள். நான் மட்டும் இந்து மதத்தைச் சேர்ந்தவர். வீடு கட்ட ஆரம்பிக்கும்பொழுது முதலில் என் மனைவிக்கு பல்வலி என்று ஆரம்பித்தது. சாதாரண பல்வலி என்று கிராம வைத்தியம் செய்து பார்த்துவிட்டு, டாக்டரிடம் சென்று மருந்து சாப்பிட்டதில் உடலில் ஜன்னி வைத்ததுபோல் ஆகி விட்டது. என் மனைவி என்னிடம் வந்து யாரோ செய்வினை செய்ததுபோல் இருக்கிறது என்று சொன்னார். கோவிலுக்கு அழைத்துப் போகச் சொன்னார். உள்ளூரிலேயே உள்ள காத்தவராயன் கோவிலுக்குச் சென்று, கோவில் பூசாரியிடம் குறி கேட்டோம். அவர் அந்த இடம் வாங்கியதில் யாரோ செய்வினை செய்திருக்கிறார்கள் என்று

கூறி மூன்று நாட்கள் தங்கச் சொன்னார்கள். அப்படியும் சரியாகவில்லை. பின்பு B. முட்லூரிலுள்ள ஆஞ்சநேயர் வழிபாடு செய்பவரிடம் சென்று குறி கேட்டதில் அவரும் அதையே சொன்னார். அதுவும் சரியாகவில்லை. இதற்கிடையில் வீட்டு வேலையும் நம்பிக்கையோடு செய்து கொண்டிருந்தோம். வீட்டு வேலை ஆரம்பித்தது முதல் பிரச்சனை அதிகமாகிக் கொண்டிருந்தது. வீடு ஒட்டும் தருவாயில் விடியற்காலையில் எழுந்து வந்து பார்க்கும் பொழுது வாசற்படியின்முன் மாட்டிறைச்சி, அரிசி, தகடு, மாந்திரீகப் பொருட்கள் இருந்தன. மிகவும் பயந்துபோய் ஒருவரிடம் 10 ரூ. கொடுத்து வெளியில் வீசி விட்டோம். அதன் பிறகு ஜன்னல் ஓரம் சில்வரில் சூலம் செய்து கொண்டு வந்து வைத்தார்கள். வாசலில் மற்றொரு நாள் எழுந்து வந்து பார்க்கும் பொழுது இரண்டு மரக்கா நெல் இருந்தது.

இதனால் எங்களுக்குப் பயம் இருந்த போதிலும், அனைவரும் சொல்வதைக் கேட்டு கோவிலுக்கு மற்றும் மாந்திரீகம் செய்யும் இடங்களுக்கும் சென்றோம். இதற்கிடையில் வீட்டு வேலையும் நடந்தது. தோராயமாக ஐம்பதாயிரம் வரையில் செலவு செய்து விட்டோம். எந்தப் பலனும் இல்லை. மனதை தளரவிடாமல் வீடு கட்ட வேண்டும் என்ற ஆசையில் வீட்டு வேலையை நிறுத்தவே இல்லை. பின்பு என் மனைவிக்கு ஏவல் செய்து ஆஞ்சநேயர் முகம்போல் தொங்க ஆரம்பித்தது. கடலூருக்கு அருகில் உள்ள ஒரு இடத்திலும் மூன்று முறை குறி கேட்டோம். பலனில்லை. வீடும் முடியும் தருவாயில் இருந்தது. 2000-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து 2010-ஆம் ஆண்டு அக்டோபர்வரை இந்தத் தொந்தரவு இருந்து வந்தது. இதற்கிடையில் எனக்கும் காலை பதினொன்று மணிவந்தால், தரையில் விழுந்து புரள்வேன். இரவில் நிம்மதியான தூக்கமில்லை. யாரோ கூப்பிடுவதுபோல் இருக்கும். கெட்ட கனவுகள் நிறைய வரும். வீட்டில் சண்டை, சச்சரவும் இருந்து



வந்தது. வீட்டை விற்றுவிடலாம் என்று எண்ணினோம். சொந்த ஊருக்குச் சென்றுவிடலாம் என்ற எண்ணமும் வந்தது.

நவம்பர் மாதத்தில் B. முட்லூர் தியான மையத்திற்கு வந்தேன். மதர் இருக்கும் ரூமில் உட்கார்ந்த நான், மூன்று மணி நேரமாகியும் எழுந்திருக்கவில்லை. என்நிலை மறந்து, மதரை நோக்கி உட்கார்ந்த நான் மூன்று மணி நேரம் கழித்துதான் ரூமை விட்டு வெளியில் வந்தேன். எதுவும் என்னையறியாமல் நிகழ்ந்தது. என் உடலிலிருந்து ஏதோ பாரம் குறைந்ததுபோல் உணர்ந்தேன். அதிலிருந்து தொடர்ந்து அன்னையை நானும், என் மனைவியும் வழிபட்டு வருகிறோம், வீட்டிலும் அன்னையை வைத்து வழிபட்டு வருகிறோம். தியான மையத்திற்கும் தொடர்ந்து வந்து வழிபட்டு வருகிறோம்.

இப்பொழுது வீட்டில் அமைதியும், சந்தோஷமும் உள்ளது. எந்தவீட்டை விற்க வேண்டும் என்றோமோ அந்த வீட்டிலேயே மிகவும் ஆனந்தமாக உள்ளோம். ஏற்கனவே தங்களுக்குக் காணிக்கையுடன் இந்தப் பிரச்சனையை எழுதியுள்ளேன். அதில் விரிவாக எழுதவில்லை, இதில் விரிவாக எழுதியுள்ளேன். எங்களுக்கு உங்களின் அருளாசியும், அனுக்கிரகமும் வேண்டும் என்றும், அன்னையின் குழந்தையாக நாங்கள் இருக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம். மேலும் தியான மைய அம்மாவின் ஆலோசனைப்படி அன்னையை வழிப்பட்டு வருகிறோம். மிகவும் கஷ்டப்பட்டுக் கட்டிய வீட்டை விற்க வேண்டும் என்ற சூழ்நிலையில் அன்னையின் அனுக்கிரகத்தால் இன்று எங்கள் குடும்பம் சந்தோஷமாக உள்ளது. இந்த விஷயம் அனைவருக்கும் ஒரு அனுபவ பாடமாக இருக்க வேண்டும் என்று எங்கள் அனுபவத்தை தங்களுக்கும் எழுதுகிறேன். அன்னையின் அருளை உணர்வு பூர்வமாக உணர்ந்து பத்து வருடப் பிரச்சனையை ஒரு நொடியில் தீர்த்து வைத்த அருட்கடாட்சம் அன்னையிடமே உள்ளது.

அந்த மனை வாங்கிய நாள் முதல் பத்து வருடங்கள் ஏவல், பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகளின் பிடியில் சிக்கிச் சீரழிந்த எங்கள் வாழ்க்கை அன்னையின் அருட்பார்வை எங்கள்மேல்பட்ட நாள் முதல், நாங்களும் தொடர்ந்து நம்பிக்கையோடு அன்னையை பிரார்த்தனை செய்து வருவதின் பலனாக, இன்று எங்கள் குடும்பத்தில், முழுப் பாதுகாப்பு, அன்பு, அமைதி, ஆனந்தமான ஒரு வாழ்க்கை இவைகளை அனுபவிக்கிறோம். இவைகளை எல்லாம் அன்னையால் மட்டுமே தர முடியும் என்பதை உணர்வு பூர்வமாக உணர்ந்து, தங்கள் பாதாரவிந்தங்களை வணங்கி நன்றியுடன் காணிக்கையை சமர்ப்பிக்கிறேன். யாராலும் தீர்க்க முடியாத பிரச்சனையை ஸ்ரீ அன்னையால் மட்டுமே தீர்க்க முடியும் என்பதை உணர்ந்து, உள்ளத்தாலும், உணர்வாலும் மீண்டும் உங்கள் பாதாரவிந்தங்களை வணங்கி நன்றியை சமர்ப்பிக்கிறேன். என்றும் அன்னையும், தாங்களும் அமைதியான ஒரு வாழ்க்கையை வழங்க உங்கள் அருளாசியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் அன்னை அன்பர் பழனிசாமி, பானுமதி தம்பதியினர் B. முட்லூர்.

## ஜீவிய மணி

வாழ்வு சிறக்க எரிச்சலை விலக்குவது அவசியம்.
மனம் வளம் பெற அதைச் செய்வதுபோல்,
ஆத்ம நலனுக்காகச் செய்வது
அதி உத்தமம்.



# உண்மையின் பல்வேறு பரிமாணங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

என். அசோகன்

1985-ஆம் ஆண்டு **Chrysler Auto Company** இரண்டாயிரம் கோடி ரூபாயளவிற்கு நஷ்டத்தில் மூழ்கிய பொழுது அவ்வளவு பெரிய நஷ்டத்திலிருந்து கம்பெனியை மீட்பதற்கு வழியேயில்லை என்று பொருளாதார நிபுணர்கள் அனைவரும் அடித்துப் பேசினார்கள். **Lee Iacocca** என்ற ஒரு மேனேஜ்மெண்ட் நிபுணர் மட்டும் வழியுண்டு தன்னால் முடியும் என்று தைரியமாகப் பேசினார். எப்படி முடியும் என்று எல்லோரும் அதிசயமாகக் கேள்வி கேட்டனர். அதற்கு அவர் கம்பெனி மார்க்கெட்டிலிருந்து விலகி நிற்கிறது. மார்க்கெட்டின் தேவைகள் என்னவென்று சரியாகப் புரிந்து கொண்டு கம்பெனிக்கும் மார்க்கெட்டிற்கும் ஒரு ரீ-அலைன்மெண்ட் கொண்டு வந்தால், கம்பெனியைச் சரிசெய்து விடலாம் என்று சொன்னார். இந்த ரீ-அலைன்மெண்டை மூன்று வருடம் முயற்சி எடுத்து வெற்றிகரமாக நிகழ்த்தியும் காட்டினார். தமிழில் இதற்கழகான பழமொழியும் உண்டு. 'மனமிருந்தால், மார்க்கமுண்டு' என்பது. ஒரு பிரச்சனையில் சிக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு எடுத்தவுடனேயே பிரச்சனையின் கடைசிகட்டம்வரை தீர்ப்பதற்கான வழி தெரிய வேண்டும் என்ற அவசியமில்லை. நாம் இருட்டில் ஒருமைல் தூரம் நடந்து போக வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். இந்த ஒருமைல் தூரத்திற்கு நமக்கு டார்ச் லைட் வேண்டும் என்று நாம் கேட்பதில்லை. டார்ச் அடித்தால் அடுத்த இருபது அல்லது முப்பது அடி தூரத்திற்குத்தான் வெளிச்சம் தெரியும். தொடர்ந்து அந்த இருபது அல்லது முப்பது அடி தூரம் வெளிச்சம் இருந்தது என்றால், அந்த வெளிச்சத்தைப் பின்பற்றியே நாம் ஒரு மைல் தூரத்திற்கு நடந்து சென்றுவிடலாம்.

அம்மாதிரியே பெரிய அளவிற்கு பிஸ்னஸில் நஷ்டம் வந்துவிட்டது என்றிருப்பவர் ஒருவரை எடுத்துக் கொள்வோம்.

நஷ்டத்திலிருந்து மீளமுடியும் என்று நினைக்குமளவிற்கு தைரியம் இருக்கும் என்றாலும், முழுமையாக மீள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று உடனடியாகத் தெரிய வேண்டும் என்ற அவசியமில்லை. அடுத்த கட்டமாக உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்தால் போதும். சரியான பராமரிப்பு இல்லாமல் கம்பெனியில் குப்பை மலிந்துள்ளது, மெஷின்கள் தூசுபடிந்துள்ளன என்று தெரிந்தால், வருமானம் குறைந்து போனதற்கு அதுவும் ஒரு காரணமாக எடுத்துக் கொண்டு, உடனடியாக அதைக் கவனிப்பது நல்லது. இரண்டாம் கட்டமாக ஊழியர்கள் அக்கறையில்லாமல் வேலை செய்ததால், உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம் குறைந்து விட்டது, ஆகையால் ஆர்டர்கள் குறைந்துவிட்டன என்று தெரிந்தால், அதை சரிசெய்ய முயற்சி எடுப்பது நல்லது.

மூன்றாம் கட்டமாக, புது கஸ்டமர்களைப் பிடிக்க யாருமே முயற்சி எடுக்கவில்லை. இருக்கின்ற ஏதோ ஒரு பழைய கஸ்டமர்களை வைத்துக் கொண்டுதான் பிஸ்னஸ் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்தால், புது கஸ்டமர்களைப் பிடிக்க முயற்சி எடுப்பது நல்லது. இப்படி ஒன்றன்பின் ஒன்றாகப் பல தவறுகளைச் சரிசெய்கின்ற பொழுது, இறுதிக் கட்ட செயல்பாடு என்னவென்று நமக்குத் தானே தெரியும். இதுதான் வழக்கமாக வாழ்க்கையில் நடப்பது. இப்படி இல்லாமல் கம்பெனியில் என்னென்னவெல்லாம் தவறுகள் நடந்திருக்கின்றன என்று ஒரே நேரத்தில் பத்து அல்லது பதினைந்து தவறுகளைக் கண்டறிபவரும் உண்டு. இப்படிப்பட்டவர்கள் தைரியசாலிகளாக மட்டுமில்லாமல் அகன்ற விஷன் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். **Chrysler** கம்பெனியை நஷ்டத்திலிருந்து மீட்ட **Lee Iacoca** இப்படியொரு அகன்ற பார்வையைக் கொண்டவர். கம்பெனிக்கும் மார்க்கெட்டிற்கும் அலைன்மெண்ட் கெட்டுவிட்டதுதான் கம்பெனி நஷ்டமடைந்து விட்டதற்கே பிரதான காரணம் என்ற பெரிய உண்மையை அவர் உடனடியாக உணர்ந்து கொண்டார். அதை உணர்ந்த பிறகு அலைன்மெண்ட் கெட்டதற்கான



அடையாளங்களாக கம்பெனியில் நூறு விஷயங்கள் அவர் கண்ணில் பட்டன. எல்லாவற்றையும் சரிசெய்தால்தான் கம்பெனி நிமிரும் என்று அவர் புரிந்து கொண்டார். இப்படி அகன்ற பார்வையுள்ளவர்களுக்குக் கடைசிவரையிலும் என்ன செய்ய வேண்டும் என்று தெரிவதுமுண்டு. இப்படி இல்லாமல் ஒன்றன்பின் ஒன்றாகவும் தெரிவதுண்டு. முன்னது அபூர்வம். பின்னதுதான் சகஜமாக இருக்கும்.

4. இனி அடுத்த உண்மையின் பரிமாணத்திற்கு வருவோம். ஆங்கிலத்தில் இதை **Honour** என்று சொல்கிறார்கள். தமிழில் இதை நாணயம், நேர்மை, சுயமரியாதை, ஆத்ம கௌரவம் என்றெல்லாம் சொல்லலாம். இங்கிலாந்தில் பிரபு வம்சத்தில் பிறந்தவர்கள் தம்மை மற்றவர்கள் **honourable** என்று நினைக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்கள். இப்படிப்பட்ட நற்பெயரை சம்பாதிப்பது கடினம். ஆனால் இழப்பது சுலபம் என்றிருந்தது. லிஸி தன்னைத் திட்டியதில் டார்ஸிக்கு மிகவும் வருத்தம் கொடுத்ததே, தன்னை அவள் ஜென்டில்மேனாக நினைக்கவில்லை என்பதுதான். மேலை நாட்டவருக்கும், நம் நாட்டவருக்கும் இந்த **Honour** விஷயத்தில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. நம்முடைய நடவடிக்கைகளை எல்லாம் கவனிக்கின்ற மேலை நாட்டவர்கள் நாம் மிகவும் Honour குறைந்தவர்கள் என்று சொல்வார்கள். அதுவும் ஓரளவிற்கு உண்மை என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

மேலை நாட்டவருக்கு, கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுவது மிகவும் முக்கியம். வாங்கியக் கடனைத் திருப்பித் தருவது மிகவும் முக்கியம். மேலை நாடுகளில் நீதிமன்றங்களில் பொய் சாட்சி சொல்லும்படி அழைத்தால், மிகவும் கோபப்படுவார்கள். வக்கீலிடம் வழக்குப்போட ஒருவர் அணுகினால், உங்கள் பக்கம் உண்மையிருக்கிறதா? உண்மையிருந்தால் உங்கள் வழக்கை எடுத்துக் கொள்கிறேன் என்றுதான் சொல்வார். நம் நாட்டில் இதையெல்லாம் நினைத்துப் பார்க்க முடியுமா?

(தொடரும்)

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 94. யோகம் சித்திப்பது - ஓர் அம்சம் சித்திப்பதும் யோக சித்தி எனப்படும்.

- தவம், யோகம், ஆன்மீகம், துறவறம் எனக் கூறும்பொழுது ஒரு பரந்த உலகை நாம் மனதில் கொள்கிறோம். இது எல்லா துறைகட்கும் பொதுவான கருத்து.
- வாழ்வு, அரசியல், கல்வி, விவசாயம், வாணிகம், நிர்வாகம் என்பவை அவை.
- மேதை என்ற கருத்து அளவிறந்த துறைகட்குப் பயன்படும்.
- மௌனம் என்ற கருத்து யோகத்தில் அனைவரும் அறியும் கருத்து.
- திருஷ்டி, ஞானம், மந்திரம், காவியம், தந்திரம், வைத்தியம், ஜோஸ்யம் யோகத்தின் பகுதிகளாகக் கருதப்பட்டன.
- அஷ்டாவதானம், சதாவதானம், சூட்சும ஞானம் என்பவை 14,600 சித்திகளாகப் பிரிந்து ஒவ்வொன்றிற்கும் உரிய மந்திரம் ஏற்பட்டுள்ளது.
- வழக்கு ஜெயிப்பது ஒரு யோக சக்தி.
- பூர்வ ஜென்ம ஞானம் அது போன்றது.
- இருபது இலக்க எண்ணைப் பத்து இலக்கமுள்ள எண்ணால் பெருக்கிக் கூற ஒரு நிமிஷம் போதும் என்பது யோக சித்தி. உலகெங்கும் இத்திறன் உள்ளவர் உண்டு.
- மரண தண்டனை விதித்தபின், கொலையாளி உயர்த்திய கத்தியை, மறைய வைக்கும் திறன் பக்திக்குண்டு.
- ஸ்ரீரங்கம் திருவிழாவில் தேர்ச்சீலை எரிவது இருநூறு மைலுக்கு அப்பால் தெரிவது அது போன்றது.



- நரி பரியானது யோகம், யோக சித்தி.
- பொன்னுக்குப் பாடிய கம்பனும், கூழுக்குப் பாடிய ஔவையும் பெற்றவை யோக சித்தி.
- கொட்டிக் கிழங்கு விற்க நாமகளை அழைத்ததும் யோக சித்தி.
- சிற்பி சிற்பம் செதுக்கும் பொழுது உடலில் மச்சமுள்ள இடத்தில் சிற்பத்தின் கல் சிதறுவது சிற்பி ரிஷி எனக் கூறுகிறது.
- அரசனுக்குள்ள அறியாமையை எடுத்துரைக்கும் அறிவு ஒரு சித்தியாகும்.
- அகந்தை கரைவதும், ஆத்ம தரிசனம் பெறுவதும், மௌனம் வாயில், மனத்தில், ஆத்மாவில், ஜீவனில், பிரபஞ்சத்தில், பிரம்மத்தில் சித்திப்பதும் யோகம்.
- விலை போகாத சரக்கு விற்பது ஆன்மீகப் பலன்.
- பூமிக்கடியில் நீர் ஊற்று உள்ளதை உடலில் உணர்வு கூறுவது சித்தி.
- பிறர் மனம் நினைப்பதைக் கூறுவதும் அதுபோன்றதே.
- மரத்திலிருந்து விழுந்த பழம் மீண்டும் மரத்தில்போய் ஒட்டிக் கொள்வது எதைச் செய்தால் அது நடக்கும் என அறிபவை சித்தி.
- கையால் மலையை அரை அங்குலம் நகர்த்துவது யோகம்.
- ரஸவாதம் சித்தி.
- காயகல்பம் உடல் பெறக்கூடிய சித்தி.
- சத்தியவதி உடலில் உள்ள மீன் வாடையைப் போக்கும் மந்திரம் யோக சித்தியைக் காட்டுகிறது.

## அஜெண்டா

### நிர்வாணம்

- புத்தர் நிர்வாணம் எய்தினார் எனப் படிக்கிறோம்.
- தாகூர் மனத்தின் நிர்வாண சித்தி பெற்றவர் என அன்னை கூறினார்.
- பொதுவாக நிர்வாணம் எனில் உடைமை, உரிமை, நம்பிக்கையை இழத்தல் எனப் பொருள்.
  திகம்பரர் என்றால் திக்கை அம்பரமாக உடையவர்.
  திசை உடையெனில் அது நிர்வாணம்.
  மைசூரில் நிர்வாண வழிபாடுள்ள இடம் உண்டு.
  அவர்கள் நிர்வாணமாகக் கூடி வழிபடுவார்கள்.
- அஜெண்டாவில், அன்னை நிர்வாணம் என்பது எல்லா நிலைகட்கும் உண்டு, மனம், உயிர், உடல், சைத்தியப் புருஷனுக்குப் பின்னால் நிர்வாணம் உள்ளது என்கிறார்.

  மனத்திற்கும், சத்திய ஜீவியத்திற்கும் இடையில் நிர்வாணம் உள்ளது.
- மேல்மனத்திலிருந்து உள்மனம் சென்றால் அங்கு மூன்று வாயில்கள் உள்ளன.
  1. மனோமயப் புருஷன்.
  2. நிர்வாணக் கதவு.
  3. சைத்திய வாயில்.
- 10 ஆண்டுகள் முயன்று பகவான் இந்தச் சூட்சும வாயிலைக் கண்டு முதலிரண்டையும் விலக்கி, சைத்திய வாயில் மூலம் அடிமனக் குகையில் சைத்தியப் புருஷனை அடைந்து மேலேபோய் சத்திய ஜீவியத்தைத் தொட்டார்.
- நிர்வாணம் எனில் உள்ளவை அனைத்தையும் இழத்தல்.

  மனத்தின் நிர்வாணம் எனில் மனம் தன் நம்பிக்கைகள் அனைத்தையும் இழத்தல் — புத்தர் பெற்றது.



  உயிரின் நிர்வாணம் — ஆசைகளை விடுதல், இது விரதம் தரும்.

  விரதம் என்பதால் பெரும் ஆன்மீகப் பலன் எழும்.

  உடலின் நிர்வாணம் — உடலுக்குரியது உயிர்.

  உயிரை உடல் எடுத்துக் கொள்ளாத நிலை நிர்வாணம்.

  உடலின் நிர்வாணம் — மரணம்.
- நிர்வாணத்திற்கு நடைமுறைப் பலன் உண்டு. அதை Non-Reaction எனலாம்.

  பிரச்சனை எழும்பொழுது மனதால் எரிச்சல் படாமலிருப்பது Non-Reaction.

  அதைப் பின்பற்றியவருக்கு 43,000 சம்பளம் எதிர்பாராமல் உயர்ந்து 63,000 ஆயிற்று.

  மாமியார் கொடுமை, மருமகள் கொடுமைக்குச் சிறந்த பரிகாரம் இது.

  Non-Reaction கொடுமை செய்பவரைக் காலத்திற்கும் விலக்கும்.

### ஜீவிய மணி

நாமறிந்த வாழ்வுக்கும், அன்னை இயல்பாக வழங்கும் வாழ்வுக்கும், கவலை தோய்ந்த உள்ளத்திற்கும், மகிழ்ச்சி பொங்கும் நெஞ்சத்திற்கும் உள்ள தூரம் உண்டு. மாற்றத்தை நாடிப் பெறுபவர்களுக்கு இம்மாற்றம் தவறாமல் தெரியும்.

**கவலையின் சுனை மகிழ்ச்சியின்<br>ஊற்றாவது மாற்றம்.**

## கலாகுட்டி நடத்திய கல்யாணம்

இல. சுந்தரி

மதியம் 12.30 மணி, 'அரவிந்த வித்யாலயா' பள்ளியின் தொடக்கப்பள்ளி மதிய இடைவேளை மணியொலித்தது. சிறுவர், சிறுமியர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வெளியேறினர். இனி மீண்டும் 2 மணிக்குத்தான் பள்ளி தொடங்கும்.

மதியவுணவு கொண்டு வந்த குழந்தைகள் சிறுசிறு குழுக்களாக வழக்கமாகத் தாம் உணவு உண்ணும் இடத்திற்கு விரைந்தனர். வீட்டிற்குச் செல்லும் குழந்தைகள் வெளி வாயிலை நோக்கிச் சென்றனர்.

கலா என்ற நான்காம் வகுப்பு மாணவி வாயிலுக்கு முன்புறமுள்ள மரத்தடியில் உட்கார்ந்தாள். இவள் சகோதரி மாலா அந்தப் பள்ளியின் மற்றொரு பகுதியிலுள்ள மேனிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிப்பவள். 1 மணிக்குத்தான் அவளுக்கு வகுப்பு முடியும்.

அப்பள்ளியின் இரு பிரிவுகளாகத் தொடக்கப் பள்ளியும், மேனிலைப் பள்ளியும் உள்ளன. இங்குள்ளவர்கள் அங்கும், அங்குள்ளவர்கள் இங்கும் அனுமதியின்றி செல்லக் கூடாது. ஆனால் இரண்டு பள்ளிகளுக்கும் பிரதான வாயில் ஒன்றே. அங்குதான் இரண்டு பிரிவு பள்ளி மாணவர்களும் சந்திக்க முடியும். எனவேதான், மாலாவின் வருகைக்காகக் கலா காத்திருந்தாள்.

இவர்கள் தினமும் மதியவுணவு கொண்டு வருவது வழக்கம். என்றேனும் அம்மாவிற்கு முடியவில்லை என்றாலோ, வீட்டில் ஏதேனும் விசேஷம் என்றாலோ சாப்பாடு கொண்டு வராமல் மதியவுணவு உண்பதற்கு வீட்டிற்குச் செல்வது வழக்கம். இன்று அம்மாவிற்கு வேலையதிகம். அதனால் இருவரையும் மதியவுணவிற்கு வீட்டிற்கு வரச்சொல்லி விட்டாள். அப்படி வர நேரும் போதெல்லாம் இரண்டு பேரும் சேர்ந்து வர வேண்டும் என்றும் அம்மா சொல்லியிருந்தாள். அதனால்தான் அக்கா மாலாவின் வரவிற்காகக் கலா காத்திருந்தாள்.



ஒரு மணியாகிவிட்டது. மேனிலைப்பள்ளியின் மதிய இடைவேளை மணி ஒலித்தது. மாணவர் குழாம் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வெளியேறியது. மாலா வந்து தன்னை அழைத்துப் போவாள் என்று காத்திருந்த கலா எல்லோரும் வெளியேறிய பின்னும் மாலா வராததால் எழுந்து தேட ஆரம்பித்தாள். மாலாவின் வகுப்புத் தோழிகளும் கண்ணில் படவில்லை. ஒரு வேளை மறதியாகத் தன்னை விட்டு விட்டுப் போய்விட்டாளோ என்றெண்ணியவாறு, பசி, கோபம், ஏமாற்றத்துடன் விரைவாக வீடு நோக்கி நடந்தாள்.

வீட்டு வாயிலில் மாலாவின் செருப்புகள் கிடந்தன. அதைக் கண்டதும் கலாவின் கோபம் மேலும் அதிகரித்தது. விரைந்து சென்று, 'அம்மா மாலா வந்தாச்சா?' என்றாள்.

அம்மா பதிலேதும் பேசாமல் 'உம், உம்' என்றாள். 'இரண்டு பேரும் சேர்ந்து வரணும்னு நீதானே சொன்னே. அவ என்னைத் தனியாவிட்டுட்டு வந்திட்டா' என்று சிணுங்கினாள்.

'அவமேல தப்பில்லை கலா. அவளுக்குக் காலையிலேயே வயிற்றுவலியாம். துடிச்சு அழுதிருக்கா. அதனால அவளோட டீச்சரே அவளை ஆயாவுடன் அனுப்பிட்டாங்க. அவளை டாக்டரம்மாகிட்டே அழைத்துப் போய் மருந்து வாங்கிக் கொடுத்தேன். இப்பதான் தூங்கறா. அவ உன்னை வேணும்னு விட்டுட்டு வரலை' என்று அம்மா சமாதானம் செய்தவுடன், பாசத்துடன் உள்ளே போய் தூங்கிக் கொண்டிருக்கும் மாலாவைக் கனிவுடன் பார்த்தாள்.

அம்மாவிடம் வந்து, 'அம்மா! மாலா பாவம்மா, நான் தெரியாம சொல்லிட்டேம்மா' என்று மன்னிப்பு வேண்டினாள்.

'சரி, சரி, நீ சாப்பிட வா. இப்போதே நேரமாகிவிட்டது. சாப்பிட்டுவிட்டு, சீக்கிரம் ஸ்கூல் போக வேண்டாமா?' என்று கூறிய வண்ணம் அம்மா அவளுக்குத் தட்டில் பரிமாறினாள்.

கலா சுரத்தில்லாமல் சாப்பிட்டாள். 'ஏன் என்னவோ போலிருக்கிறாய். சரியாகச் சாப்பிடு' என்றாள் அம்மா.

'எனக்கு சாப்பிட பிடிக்கலம்மா' என்றாள் கலா. அம்மா பதில் பேசாது சாதம் போட்டாள். கலா விருப்பமின்றிச் சாப்பிட்டாள்.

‘சரி, புறப்படு நேரமாகிவிடும், அப்புறம் உள்ளே விடாமல் பனிஷ்மெண்ட் தருவார்கள்’ என்றாள் அம்மா.

‘நான் மட்டும் தனியா போகணுமா அம்மா?’ என்று கேட்டுவிட்டுத் தயங்கித் தயங்கி நின்றாள்.

நீ தனியாகப் போக வேண்டாம். வேண்டுமானால் நானே உன்னைக் கொண்டு விடுகிறேன் என்று அம்மா புறப்படத் தயாரானாள்.

‘போம்மா, எனக்கு ஸ்கூல் போக பிடிக்கல. நானும் மாலாவுக்குக் குணமானதும் அவளோடு சேர்ந்தே போகிறேனேம்மா’ என்று கெஞ்சிக் கேட்டாள்.

‘அப்புறம் மிஸ் லீவு லெட்டர் கேப்பாங்க, என்னவென்று சொல்வாய்?’ என்று நியாயமான காரணத்தை அம்மா சொன்னாள்.

‘எனக்கும் வயிற்று வலி என்று சொல்லிவிடுவேன்’ என்றாள் கலா.

‘என்ன புத்தியிது? பொய் சொல்லும் குணம். வாராவாரம் தியானமையத்திற்குப் போகிறோம். பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னா மதர்க்குப் பிடிக்காதுன்னு படிச்சுப்படிச்சுச் சொல்றாங்க. நம்ம வீட்ல அன்னையை வைத்துக் கொண்டு பொய் பேசினா அன்னை இங்க இருக்கப் பிரியப்படமாட்டாங்க’ என்றாள் அம்மா.

துவண்டு போனாள் சிறுமி. அவளுக்கு அன்னையை மிகவும் பிடிக்கும். அவள் அப்பா தீவிர அன்னை பக்தர். எது செய்தாலும் இது அன்னைக்குப் பிடிக்காதது. இது அன்னைக்குப் பிடித்தது என்ற கோணத்தில்தான் செயல்படுவார். திடீரென்று தன் கெட்ட புத்திக்குக் கலா வெட்கப்பட்டாள்.

என்றாலும் மாலா வராமல் தான் மட்டும் போகப் பிடிக்கவில்லை அவளுக்கு. படிக்கும் காலத்தில் திடீரென இப்படிச் சுதந்திரவுணர்வு பிள்ளைகளுக்கு வருவது இயல்பு. குறித்த நேரத்தில் பள்ளி செல்லும் அந்தக் கட்டுப்பாடு, வீட்டிலுள்ளவர்கள், மற்றும் சுதந்திரமாகச் செயல்படுபவர்கள் போன்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது துன்பமாக



இருக்கும். அந்த நிலையில்தான் இப்போது கலா இருந்தாள்.

அம்மா அவளை மெல்லச் சமாதானப்படுத்த முயற்சி செய்தாள். ‘அப்படியே லீவு போட்டாலும் சந்தோஷமா விளையாட முடியாது. தூங்கலாமென்றால் படிக்கும் நேரத்தில் சோம்பல்பட்டால் அன்னைக்குப் பிடிக்காது. அதற்குப் பதிலாக வேறொரு நாள் நல்ல காரணத்திற்காக லீவு போட்டால் சந்தோஷமாகவுமிருக்கலாம்’, என்றாள் அம்மா.

‘வேறு என்ன நல்ல காரணம்?’ என்றாள் கலா. ‘மகா சித்திக்குக் கல்யாணம் நிச்சயமானதும் நாலு நாட்கள் லீவு போட்டுவிட்டு எல்லோரும் சேர்ந்து சந்தோஷமாய் போகலாம்’ என்றாள் அம்மா.

‘சித்தி கல்யாணம் ஏன் சீக்கிரம் வரலை?’ என்றாள் கலா.

‘ஓ, அதுவா? தாத்தாவுக்குப் பணம் கிடைக்கல. பணம் கிடைச்சதும் கல்யாணம் நடக்கும்’ என்றாள் அம்மா.

குழந்தை சமாதானம் ஆகிவிட்டாள். ஆம் லீவு போட வேண்டாம். அது சரியில்லை. ஆனால் சீக்கிரம் மகா சித்தியின் கல்யாணம் வரவேண்டும் என்பதே இப்போதைய ஆர்வம். மனதைத் தேற்றிக் கொண்டு பள்ளிக்கூடம் சென்று விட்டாள்.

ஆனால், சீக்கிரம் தாத்தாவிற்குப் பணம் கிடைக்க வேண்டும். சித்திக்குக் கல்யாணம் வரவேண்டும் என்பதே அவள் நினைவாயிற்று.

மாலையில் வீட்டிற்கு வந்ததும் அப்பாவிடம் யோசனை கேட்க முடிவு செய்தாள்.

‘அம்மா! அப்பா எங்கேம்மா?’ என்றாள். ‘இன்றைக்கு என்ன கிழமை? அப்பா எங்கே போவார்?’ என்று அம்மாவும் இவளைப் பதில் கேள்வி கேட்டாள்.

ஆம், இன்று வியாழக்கிழமை. யோகா சென்டரில் பூரண யோகக் கூடல். இது இவர்கள் வீட்டிலிருந்து சற்றுத்தொலைவில் உள்ளதால் அப்பா மட்டும் சென்று விடுவார். ஞாயிற்றுக்கிழமை தியானக்கூடல் இவர்களுக்கு அருகில் உள்ள தெருவில் நடப்ப-தாலும், எல்லோருக்கும் அன்று விடுமுறையாக இருப்பதாலும் அன்றைய கூடலுக்கு எல்லோருமே செல்வார்கள். அது

நினைவிற்கு வரவே தியான மையச் சொற்பொழிவில் அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனை பலிப்பதுபற்றியும், காணிக்கைபற்றியும் கேட்டதை நினைத்துக் கொண்டாள். இவள் அம்மாவும் அப்பாவும் அதைப்பற்றி மனம் உருகப் பேசிக் கொள்வதையும் கேட்டிருக்கிறாள். உடனே அவளுக்குத் தியான மையத்திலுள்ள அன்னையின் திருவுருவம் நினைவிற்கு வந்தது. தேர்வில் வெற்றி பெற்றவர்கள், வேலை கிடைக்கப் பெற்றவர்கள், நோய் குணமானவர்களெல்லாம் அந்த அன்னை முன்பு வணங்கி நன்றியால் நெகிழ்வதை அவள் பார்த்திருக்கிறாள்.

வரும் ஞாயிற்றுக்கிழமை கூடலின்போது தானும் காணிக்கை வைத்து மகா சித்தியின் கல்யாணத்திற்காகப் பிரார்த்திக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணிக்கு எல்லோரும் மையத்திலிருந்தனர். கூடல் தொடங்கியது. சாவித்ரி படித்து, அன்பர் அனுபவம் கூறி, சொற்பொழிவும் நடந்தது. அன்றைய சொற்பொழிவில் அவளுக்கு இரண்டு கருத்துகள் கிடைத்தன.

நியாயமான பிரார்த்தனைகள் நிறைவேற்றப்படும். உண்மையான அன்பிற்கு அன்னை பலிப்பார் என்பவை அவளுக்குத் தெம்பூட்டின.

தியானம் முடிந்து அவரவர்கள் பணிவுடன் அன்னைக்குக் காணிக்கை செலுத்தி வணங்கினர். கலாவும் தன் சேமிப்புப் பணத்திலிருந்து கொண்டு வந்த பணத்தை அன்புடன் சமர்ப்பித்து வணங்கினாள். மனதிற்குள் அன்னையிடம் தீவிரமாகப் பிரார்த்தித்தாள். அன்னையே! எங்கள் தாத்தாவிற்குப் பணம் கிடைக்க வேண்டும். சீக்கரம் எங்கள் மகா சித்தியின் கல்யாணம் நடக்க வேண்டும். நாங்கள் மகிழ்ச்சியோடு அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று கள்ளமில்லாமல் நெஞ்சுருக வேண்டினாள்.

கலாவின் தாத்தா வீட்டில், திருமணத்திற்குக் காத்துக் கொண்டிருக்கும் இளைய மகள் மகாவைப் பற்றிய கவலை காசிநாதனுக்கு. தமக்கிருக்கும் நிலத்தை விற்று மகாவின் கல்யாணத்தையும் நடத்தி மீதித் தொகையை வங்கியில்



வைத்தால் தங்களுக்கும் பாதுகாப்பு என்று எண்ணியிருந்தார். நெருக்கடி என்று நிலத்தை விற்கப் போனால் இரக்கமின்றி விலை கேட்கிறார்கள். அடிமாட்டு விலைக்கு விற்றால் மற்ற செலவுகளுக்கு என்ன செய்வது? மகா சற்றுப் பார்வையாக, நிறமாக இருந்திருந்தால் அவளைத் திருமணம் செய்து கொள்ள யாரேனும் ஆர்வமுடன் வரலாம். அவளோ பார்வைக்குச் சுமாராய் மாநிறமாயிருக்கிறாள். அவள் நல்ல குணமுள்ள, குடும்பத்திற்கு ஏற்ற பெண்தான். ஆனால் புறத்தோற்றத்திற்குக் கொடுக்கும் மதிப்பை அகத்தின் அழகிற்கு எத்தனை பேர் கொடுக்கிறார்கள். ஜாதகமும் அவளுக்கு அத்தனை சிறப்பாக அமையவில்லை. அவள் ஜாதகத்தையும், மாநிறத்தையும் இட்டு நிரப்ப வரதட்சணை தேவைப்படுகிறது. இவள் ஒரு பெண்தான் கல்யாணத்திற்கு இருப்பவள். இனி பிரச்சனை இல்லை என்று நிலத்தை விற்கப் போனால் குறைந்தவிலை கேட்கிறார்கள். இந்த நிலைமையில் நல்ல வரன் வந்திருக்கிறது. மாப்பிள்ளை வெளிமாநிலத்தில் பணிபுரிவதால் வரனின் பெற்றோர் வந்து மகாவைப் பார்த்துவிட்டு வரதட்சணை பேசி விட்டுப் போய்விட்டனர். பணம் சேர்ப்பது தன் பங்கு.

ஆத்திரத்தில் செய்வதறியாது ஊஞ்சலில் அமர்ந்து காலை அழுத்தி விந்தி வீசி, வீசி ஊஞ்சலை ஆட விடுகிறார். அவர் மனைவி அவருடைய மனவுளைச்சல் புரிந்து செய்வதறியாது தவிக்கிறாள். அவர் கண்களில் படுமாறு சற்று தூரத்தில் வந்து நிற்கிறாள். 'என்ன?' என்பது போல் கோபமாய்ப் பார்க்கிறார்.

'கோபப்பட்டால் உடம்பிற்கு ஆகாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார் அல்லவா?' என்று மெல்லத் தயங்கித் தயங்கிக் கூறினாள்.

'என்ன செய்யச் சொல்கிறாய்? என் நிலைமை அப்படி' என்றார் கோபம் தணியாமல்.

'உங்கள் கவலை நியாயமானதுதான். ஆனால் அதற்குக் கோபப்பட்டு என்ன பயன்? நான் கடவுளை வேண்டிக் கொண்டேயிருக்கிறேன். நல்லவழி பிறக்கும். நம்பிக்கையுடன் இருங்கள்' என்று ஆறுதலாய்க் கூறினாள்.

அதற்குள் வாசலில் 'போஸ்ட்' என்று தபால்காரரின் குரல் கேட்டது. ஆவலுடன் இருவரும் வெளியே வர, மகாவும் உள்ளேயிருந்து வாசல்வரை வந்தாள். எல்லோருக்கும் பிள்ளை வீட்டாரிடமிருந்து ஏதேனும் தகவலாய் இருக்குமோ என்ற ஆர்வம், எதிர்பார்ப்பு.

தபால்காரர் ஒரு கவரைக் கொடுத்து விட்டுப் போனார். கவர் மகாவின் பெயருக்கு வந்திருந்தது. யார் போட்டிருப்பார்கள். எல்லோரும் ஆவலுடன் பார்த்தார்கள். அன்னை தியான மையத்திலிருந்து வந்திருந்தது. எல்லார் முன்பும் கவரைப் பிரித்தாள் மகா. ஒரு காணிக்கை ரசீதும் ஸ்ரீ அன்னையின் படமும் மலர்ப் பிரசாதமுமிருந்தது.

'நீ காணிக்கை அனுப்பியிருந்தாயா என்ன?' என்று அம்மா கேட்டாள்.

'நான் ஒன்றும் அனுப்பவில்லையே' என்றாள் மகா. 'ஒரு வேளை உன் அக்கா வசுமதி உனக்காக அனுப்பிருக்கக் கூடும்' என்றாள் அம்மா.

'என்ன அது காணிக்கை? யாருக்கு?' என்றார் காசிநாதன். 'வசுவும், அவள் வீட்டாரும் அன்னை பக்தர்கள் அவள் சொல்லியிருக்கிறாள். அன்னைக்குக் காணிக்கை செலுத்தி பிரார்த்தனை செய்தால் பலிக்கும் என்று மகாவின் திருமணத்திற்காக வேண்டிக் கொண்டு நம் பெயரில் காணிக்கை செலுத்தியிருப்பாள்' என்று அம்மா பெருமிதத்துடன் சொன்னாள்.

மகாவிற்கு மகிழ்ச்சி. தனக்காக அக்கா தன் பெயருக்குக் காணிக்கை அனுப்பியிருக்கிறாள் என்றவுடன் பிரசாதத்தை நன்றியுடன் கண்ணில் ஒற்றிக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள்.

காசிநாதன் தன் மனச்சோர்வு நீங்க என்ன செய்வது என்று தெரியாமல், 'இறைவா! எல்லோரும் உன்னை வேண்டிக் கொள்ள நினைக்கிறார்கள். நானோ, என் முயற்சி, என் கடமை என்று எண்ணிச் சோர்ந்து போகிறேன். நானும் அவர்களைப் போல் உன்மீது நம்பிக்கை வைத்துச் செயல்பட்டால் நடக்குமோ?' என்று உள்ளூர எண்ணிய வண்ணம் உட்கார்ந்திருந்தார்.



**(அன்னை உலகுக்குப் புதிய சக்தியைக் கொண்டு வந்துள்ளார். அது, சட்டம் தவறினாலும், தர்மம் தவறினாலும் தான் தவறாது செயல்படும். கோர்ட் சட்டத்தை நிலைநிறுத்தத் தவறினாலும் சமூகத்தின் மூலம் அன்னை நீதி வழங்குவார். அன்னை தம் சூழலால் நமக்கு உதவும் நபர்களாகவும், சந்தர்ப்பமாகவும் நம்மைப் புரிந்துகொள்ளும் சூழ்நிலையாகவும் செயல்படுவார்.)**

'என்ன காசி? ஏன் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்?' என்று கேட்டுக் கொண்டே மாலி என்ற மகாலிங்கம் வந்தார்.

'அடடே! மாலியா? வா வா, ஊருக்குப் போய் எத்தனை மாதம் ஆயிற்று? எங்களையெல்லாம் மறந்து விட்டாயா என்ன?' என்று நெடுநாள் வெளியூர் சென்றிருந்த தன் பால்ய நண்பனை வரவேற்றார் காசிநாதன்.

'என்ன செய்ய காசி? பிள்ளை என்னை விடமாட்டேன் என்கிறான். எனக்கோ இங்குத் தோட்டம், துரவு என்று நடந்து திரிந்து, சென்னை பிடிக்கவில்லை. ஆனாலும் ஒரே மகன். இந்தவூரில் நான்தனியேயிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. மெதுவாகச் சமாளித்து விட்டு வந்துவிட்டேன். அது போகட்டும். மகா கல்யாணம் என்னவாயிற்று? நல்ல வரன் ஏதேனும் வந்ததா?' என்று பரிவுடன் விசாரித்தார்.

'நல்ல வரன் வந்திருக்கிறது. என்ன குறைந்தாலும் ஐம்பதாயிரம் இல்லாமல் முடியுமா? நிலத்தை விற்க முடிவு செய்துவிட்டேன். அவசரம் என்றால் விலை குறைத்துக் கேட்கிறார்கள். என் சொத்தே அதுதான். இவ்வளவு குறைத்து விற்றால் வாழ்நாள் பூரா என்ன செய்வது? அதுதான் யோசனை இப்போது' என்று நண்பனைப் பார்த்த மகிழ்வில் பேச ஆரம்பித்தார்.

'இத்தனை நாட்கள் நான் அங்கேயே தங்கி விட்டதால் இப்போது கையில் நிறைய பணமிருக்கிறது. ஐம்பதினாயிரம் தானே வேண்டும். நான் தருகிறேன். நிலத்தை விற்பது பற்றிப் பொறுமையாக யோசிக்கலாம்' என்று கூறினார் மாலி.

'என்ன மாலி இப்படிச் சொல்கிறாய்? ஐம்பதினாயிரம் என்பது சிறிய தொகையா என்ன? என்னை நம்பிக் கொடுப்பதாய்ச் சொல்கிறாயே' என்றார்.

‘உன்னை நம்பிச் சொல்லவில்லை. கடவுளை நம்பிச் சொல்கிறேன். உனக்குப் பொய் பேசத் தெரியாது. நீ ஏமாற்ற மாட்டாய். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஒரு பெண்ணின் வாழ்வு என்னால் மலர்ந்தால் சந்தோஷம்தானே. ஏதோ உள்ளுக்குள் ஒன்று உனக்கு உதவச் சொல்கிறது’ என்றார் மாலி.

‘சரி, மாலி. நான் இப்போதே மாப்பிள்ளை வீட்டினருடன் பேசுகிறேன்’ என்று சுறுசுறுப்புடன் செயல்பட ஆரம்பித்தார். அதற்குள் மாப்பிள்ளை பையன் லீவு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறான். அவன் சிறந்த அன்னை பக்தன். எனவே தன் திருமணத்திற்குத் தன் பெற்றோர் வரதட்சணை பேசியிருப்பது அவனுக்குச் சம்மதமில்லை. அதனால் பெண் வீட்டாருடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட அவன் தந்தை, வரதட்சணை வேண்டாம் எனவும் பையன் ஆடம்பரமின்றிக் கல்யாணம் செய்யப் பிரியப்படுவதாயும், நல்ல நாள் பார்க்கும்படியும் சொன்னார். எனவே, மகாவின் திருமணம் உறுதியாயிற்று. ஏற்கனவே புகைப்படம் மூலம் பெண்ணும், ஆணும் ஒருவரையொருவர் பார்த்திருந்தனர். விசாரித்தவரை பையன் நல்ல குணம் எனவும் தெரிந்திருந்தது.

பெண் வீட்டார் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா என்ன? உடனே மகாவின் அப்பா தன் மூத்த மகள் வசுவிற்கும், மாப்பிள்ளைக்கும் இந்த மகிழ்ச்சியைத் தெரிவித்து திருமணத்திற்கு முன்னதாகவே புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதிவிட்டார்.

பள்ளிக்கூடம் முடிந்து, கலாவும், மாலாவும் வீட்டிற்கு வந்தனர்.

அம்மா எங்கோ வெளியில் புறப்படத் தயாராக இருந்தாள்.

‘கலா, மாலா இரண்டு பேரும் சீக்கிரம் கைகால், முகம் கழுவி பால் குடித்துவிட்டுப் படிக்க உட்காருங்கள். தியான மையம் சென்று வந்து விடுகிறேன்’ என்றாள் அம்மா.

‘இன்று வெள்ளிக்கிழமைதானே?’

‘இன்று ஏதேனும் சிறப்புக் கூடல் உண்டா?’ என்றாள் கலா.



‘இன்றைக்கு அன்னைக்கு நன்றி சொல்லிவரப் போகிறேன்’ என்றாள் அம்மா.

‘எதற்கு நன்றி சொல்லப் போகிறாய்?’ என்றாள் மாலா.

‘மகா சித்திக்குக் கல்யாணம் முடிவாகிவிட்டது என்று தாத்தா நம்மை எல்லாம் புறப்பட்டு வரச்சொல்லி எழுதியிருக்கிறார்’ என்றாள் அம்மா.

‘அப்படியானால் நானும் உன்னுடன் வருகிறேனம்மா. நானும் அன்னைக்கு நன்றி சொல்ல வேண்டும்’ என்றாள் கலா ஆர்வத்துடன். அவள் பிரார்த்தனை பலித்துவிட்டது.

நியாயமான காரணத்தைக் கூறி லீவு லெட்டர் அனுப்பிவிட்டு எல்லோரும் ஊருக்குச் சென்றனர். தாத்தா, பாட்டி சித்தி யாவரும் இவர்களை அன்புடன் வரவேற்றனர்.

கலாவின் தந்தை மூத்த மாப்பிள்ளை என்பதாலும், தம் பிள்ளைபோல் நடப்பவராதலாலும் அவரிடம் மனம் திறந்து பேசினார் காசிநாதன்.

மகாவின் திருமணத்தை புதுமாப்பிள்ளையின் விருப்பத்தால் தான் தாம் ஆடம்பரமின்றிச் செய்வதாய்க் கூறியதுடன் அவர் அன்னை பக்தரென்றும் அன்னை முறைப்படி வரதட்சணை, ஆடம்பரம் எதுவும் கூடாது எனக் கூறியதாயும் சொன்னார்.

அப்போது அங்கு வந்த கலா, ‘தாத்தா! நான் நம்ப மகா சித்திக்குச் சீக்கிரம் கல்யாணம் வரவேண்டுமென்று அன்னையிடம் பிரார்த்தனை செய்தேன். அதனால்தான் சீக்கிரம் கல்யாணம் நடக்கப் போகிறது. அன்னையிடம் உண்மையாக இருந்தால் நடக்கும் என்று தியான மையத்தில் சொன்னார்கள்’ என்று கள்ளமின்றிப் பேசினாள் சிறுமி.

பாப்பா சொல்வது சரிதான் என்று சொல்லிக் கொண்டே புது மாப்பிள்ளையாகப் போகும் அருண் வரவே எல்லோரும் மகிழ்ந்து அவனை வரவேற்றனர்.

முற்போக்குச் சிந்தையும், அன்னை பக்தியும் கொண்ட அருண் தன்னை மணக்கப் போகும் பெண்ணிற்குப் பரிசாக பட்டுப்புடவையும், பொன்னும் கொண்டுவந்திருந்தான்.

இவன் புதுமாப்பிள்ளை என்று புரிந்தவுடன் கலா அவனிடம் சென்று, 'உங்களை அன்னைதானே அனுப்பினார்?' என்று நம்பிக்கையுடன் கேட்டாள்.

'ஆமாம்மா. அன்னை அனுப்பித்தான் நான் வந்தேன்.' என்று குழந்தையிடம் கூறியவன், மேலும் பெரியவர்களிடம் பேசினான்.

'நான் அன்னையை நம்புகிறவன். பொய், போலி, ஆடம்பரம் அன்னைக்குப் பிடிக்காது. வரதட்சணையும் அன்னைக்குப் பிடிக்காதது. இந்தக் கல்யாணம் தள்ளிப்போவதன் உண்மை-யான காரணம் எனக்குத் தெரியாது. பெண்ணின் நல்ல குணத்தை மட்டுமே விரும்பி கல்யாணத்திற்குச் சம்மதித்தேன். பெற்றோரைக் கலந்து பேசியபோது உங்களிடம் வரதட்சணை தரப் பணமில்லாமல் கல்யாணம் தள்ளிப் போவதாய் அறிந்தேன். உடனே வரதட்சணை வாங்கக் கூடாதெனச் சொல்லிவிட்டேன். இதனால் நான் என் பெற்றோரை அவமதிக்க மாட்டேன். அவர்கள் மீது எனக்கு அன்பும் மரியாதையும் குறையாது. இது தப்பு என்பதை எடுத்துச் சொன்னேன். குழந்தை சொன்னதுபோல் அன்னைதான் என் மூலம் என் பெற்றோரை ஏற்க வைத்தார்' என்றார்.

'எங்கள் மகளுக்கு இவ்வளவு நல்ல மாப்பிள்ளையைத் தந்தருளிய அன்னையிடம் நாங்களும் பக்தியுடனும், நன்றியுடனும் நடந்து கொள்வோம்' என்றார் காசிநாதன்.

மாநிறம் என்றும், குள்ளம் என்றும் வரதட்சணையின்றி யார் வருவார் என்றும், யோக ஜாதகமில்லை என்றும் ஒவ்வொருவர் பேசிய பேச்சையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு இவ்வளவு அன்பானவரைத் தனக்குத் தந்த அன்னையை மகா மட்டும் விட்டுவிடுவாளா என்ன?

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## உங்களுக்குக் கொடுக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்

அன்பர் உள்ளம் அழகானது, அற்புதமானது, அவரேயிதையறியாதது, பெரும்பாலான அன்பர்கள் அறியாதது. தாழ்ந்த மனிதனிலும் உயர்ந்த அம்சம் இது. மனிதன் தாழ்ந்தவனில்லை. உயர்ந்தவனுமில்லை. மனிதன் தெய்வப் பிறவி. ஐயோ பாவம் என உதவினால் 6 மாதத்துப் பாவம் கையோடு வரும் என்று மக்கள் மனிதனை அறிந்துள்ளனர். அது சரி. அதற்கெதிரான உண்மையுண்டு. எல்லா மனிதனுக்கும் பொருந்தும். அன்பர்கட்கு அதிகமாகப் பொருந்தும். நல்ல குடும்பம். சிரமம் வந்தது. படிப்பும், திருமணங்களும் முடிக்க வேண்டிய நேரம் பொறுக்க முடியாத சிரமம் வந்தது. அன்னையிடம் வந்து அவரும் அன்பரானார். எவரையும் உதவி கேட்கும் நிலையில்லை. ஒரு உறவினர் வந்தார். உறவைக் கொண்டாடினார். மனம் இதமானது. நல்ல மனம் நல்ல காரியத்தில் பயன்படுமா? மனம் வேறு, செயல் வேறு. ''நல்ல மனமுள்ளவர்க்கு உதவும் திறன் வேண்டும் என அன்பர் பிரார்த்திக்கலாம்'' என இருவரும் சேர்ந்து முடிவெடுத்தனர். ஓரிரு வாரங்களில் அன்னை செயல்பட்டார். இது 1990. சம்பளம் பெற்று குடும்பம் செய்பவருக்குத் தேவை சில இலட்சம். அது சிரமமான நேரத்தில் ஆயிரம் புரளாது. அன்னை செயல்பட்டார். ஆயிரங்களைக் காணாத நல்ல மனமுடையவருக்கு இலட்சங்களாகப் பணம் வந்தது. வந்தது அவருக்கு வரவில்லை. தேவைப்பட்ட அன்பருக்கு அவர் பிரார்த்தனையால், வந்த சிரமம் தீர்ந்தது. அதன்பின் நடந்தது அற்புதம், அது அன்னையின் அற்புதம். கொடுத்தவருக்குக் கொடுத்த அளவு அடுத்த மாதமும், அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வந்தது. பெற்றவர் மனம் நன்றியாலும் நல்லுணர்வாலும் அன்னை பக்தியாலும் நிறைந்ததால் கொடுத்தவரை கொடுத்து வைத்தவர் ஆக்கியது. 1955க்குப் பின் சத்திய ஜீவியம் வந்த பின் மனிதனின் நிலை இதுவே.

## அடங்காப் பிடாரி, ஆர்ப்பாட்டக்காரி

சிறிய திறமைக்குப் பெரிய வலிமை வந்தால் அடங்காது. பிடாரியாகும், ஆர்ப்பாட்டம் செய்யும். சிறிது பணமுள்ள கிராமத்து வாலிபர், பணம் தீரும்வரை ஆட்டம் ஆடுவர். ஆடி ஓய்ந்து விடுவர். ஊரிலும், ஜில்லாவிலும் பெரிய மனிதன் அடுத்த மாநிலத்தில் 100 ஆண்டுகட்குமுன் சம்பந்தம் செய்த அவள், அவனை நடுத்தெருவில் உட்கார வைத்துத் தலையில் மண்ணை வாரிப் போடுவாள். பதவியுள்ள இடத்திற்குப் பக்குவம் வருமுன் நடப்பவை. அன்னை பக்தர் அடங்காப் பிடாரி என்பதால் மட்டும் அன்னை அவரை விட்டு விலக மாட்டார். அதனால் பிடாரியாக இருக்க வேண்டும் என்பதில்லை. எந்த நிலையிலும் அன்னை அகல மாட்டார். நாமே அகன்றால்தான் உண்டு. அடங்காப்பிடாரிக்கும் ஆர்ப்பாட்டக்காரனுக்கும் அன்னை அளவு கடந்து அருள் பாலித்தது நான் அறிவேன். நல்லது நல்லதுதான், கெட்டது கெட்டதுதான். கெட்டதான பின்னும் அன்னை விலகாதது அருளின் பெருமை. கசாப்புக்கடைக்காரன், கள்ளுக்கடைக்காரன், திருடன், கடத்தல்காரனும் அன்னையின் குழந்தைகளே. ஹிட்லரை உலகை அழிக்க உதவிய தேவதை அன்னை, ''அவனும் என் குழந்தையாயிற்றே. என்னையறியாமல் அவன் எப்படிச் செயல்பட முடியும்'' என்றார். அன்னை விலக மாட்டார். செய்த காரியத்திற்குப் பலன் தவறாமல் உண்டு. நெருப்பைத் தொட்டு சுட்டால் அது தொட்டதின் பலன். அதனால் அன்னை விலகி விடுவாரா? நெருப்பால் சுட்டுக் கொள்ளாமல் இருப்பது விரும்பத்தக்கது.